



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 199 02.03.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 199 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(2–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–18
பிறை: வளர்பிறை
திதி
சதுர்த்தசி இரவு 6.28 வரை பிறகு பௌர்ணமி.
நட்சத்திரம்:
ஆயில்யம் காலை 8.16 வரை பிறகு மகம்.
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி

மேஷம் ...................... வரவு
ரிஷபம் .................. பயிற்சி
மிதுனம் ................ முயற்சி
கடகம் .................. ஆதரவு
சிம்மம் .................. வெற்றி
கன்னி ................ மேன்மை
துலாம் ................. நன்மை
விருச்சிகம் .............. அன்பு
தனுசு ..................... தெளிவு
மகரம் ................. சிந்தனை
கும்பம் .................. நேர்மை
மீனம் ...................... பணிவு

# அயதுல்லா காமேனி உயிரிழப்பு

## உறுதி செய்த ஈரான் – 40 நாட்கள் துக்கம் அனுசரிப்பு

**டெஹ்ரான், மார்ச்.2:**

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டு ராணுவத் தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி மரணம் அடைந்தார். இதை அந்நாட்டின் அரசு ஊடக நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதி செய்தது. அவரது மறைவை அடுத்து 7 நாட்கள் பொது விடுமுறையும், 40 நாட்கள் துக்கமும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக, தாங்கள் நடத்திய தாக்குதலில் கமேனி உயிரிழந்ததாக அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதை இஸ்ரேலும் கூறியிருந்தது. இந்தச் சூழலில் கமேனி உயிரிழந்ததை ஈரான் அரசின் ஊடக நிறுவனம் உறுதி செய்துள்ளது.

டெஹ்ரானில் சனிக்கிழமை கமேனி தனது அலுவல் பணிகளை வழக்கம் போல கவனித்துள்ளார். அப்போது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தரப்பு நடத்திய தாக்குதலில் அந்த கட்டிடம் சேதமடைந்தது. இதைசெயற்கைக்கோள் படங்கள் உறுதி செய்தன. அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலில் கமேனி மற்றும் அவரது மகள், மருமகள், பேரக்குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தினர் உயிரிழந்தனர்.

40 நாட்கள் துக்கம்: 86 வயதான கமேனி, கடந்த 1989-ம் ஆண்டு முதல் ஈரானில் ஆட்சி பொறுப்பில் இருந்தவர். அதனால் அவரது மறைவை அடுத்து அந்நாட்டில் 7 நாட்கள் பொது விடுமுறை மற்றும் 40 நாட்கள் துக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கமேனியின் உயிர் தியாகத்துடன், அவரது பாதையில் செல்வோம், அவரது பணி மறக்கப்படாது. அவை அதைவிட அதிக வீரியத்துடனும், ஆர்வத்துடனும் தொடரும் என ஈரான் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

யார் இந்த கமேனி? – கடந்த 1939-ல் ஈரானில் உள்ள மாஸ்ஸாத் நகரில் பிறந்தவர் அயத்துல்லா அலி கமேனி. ஈரானில் 1979-ல் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியை தொடர்ந்து ஐஆர்ஜிசி உடன் அவருக்கு நெருக்கம் ஏற்பட்டது. அந்த படைப்பிரிவில் பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்க உதவினார். இஸ்லாமிய புரட்சிக்கு பின்னர் ஈரானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து 1981 முதல் 1989 வரையில் ஈரானின் அதிபராக பொறுப்பு வகித்தார்.

கடந்த 1989-ல் முன்னாள் ஈரான் உச்ச தலைவர் ருஹோல்லா கோமேனி மறைவுக்கு பின்னால் அந்த பொறுப்பை கமேனி ஏற்றார். அவரை ஈரானின் வல்லுநர் மன்றம் தேர்வு செய்தது. தற்போது ஈரானின் அடுத்த உச்ச தலைவரையும் இந்த வல்லுநர் குழுதான் தேர்வு செய்ய உள்ளது.

பழிவாங்க ஐஆர்ஜிசி சபதம்: கமேனி உயிரிழந்ததை அடுத்து ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (ஐஆர்ஜிசி), இமாமைக் கொன்றவர்களுக்கு கடுமையான மற்றும் வருந்தத்தக்க தண்டனையை ஈரான் வழங்கும். அவர்களை ஒருபோதும் விடமாட்டோம் என்று தெரிவித்துள்ளது.



## மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம்

அமெரிக்கா, இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலைத் தொடங்கியது. அமெரிக்க ராணுவ, விமான, கடற்படைத் தளங்களை குறிவைத்து ஏவுகணைகளை வீசி வருவதால, மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் நீடிக்கிறது.

ஈரானில் மதத் தலைவர் அயத்துல்லா அலி கமேனி (88) தலைமையிலான ஆட்சியில் அணுகுண்டுகள் தயாரிக்க முயற்சி நடப்பதாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. கடந்த 2025 ஜூன் மாதம் ஈரானில் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் போர்டோ, நடான்ஸ், இஸ்பகான் உள்ளிட்ட அணுசக்தி தளங்கள் தரைமட்டமாகின.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் கமேனி ஆட்சிக்கு எதிராக ஒரு தரப்பினர் நடத்திய போராட்டத்தில் 2,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்தார். மத்திய கிழக்கில் அமெரிக்க போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் குவிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, ஈரான் அணு ஆயுத திட்டத்தை கைவிட மறுப்பதாக கூறி இஸ்ரேலுடன் இணைந்து அமெரிக்கா இப்போது அந்நாட்டின் மீது தீவிரத் தாக்குதலை நடத்தி வருகிறது.


ஈரான் தலைநகர் தெஹ்ரான் மற்றும் இஸ்பகான், லோரஸ்தான், இலாம், கெர்மன்ஷா, குவாம், கராஜ், தப்ரிஸ் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அணுசக்தி தளங்கள், ராணுவ தளங்களை குறிவைத்து அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. தெஹ்ரானில் உள்ள கமேனியின் வீடு, அலுவலகம், ராணுவ அலுவலகம், உளவுத் துறை அலுவலகத்தை குறிவைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இஸ்ரேல், அமெரிக்காவின் தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் பலியானதாக தகவல்கள் வெளிவருகின்றன. குறிப்பாக, ஹார்மோஸ்கன் மாகாணம் மினாப் நகரில் உள்ள பெண்கள் தொடக்கப் பள்ளியில் சில குண்டுகள் விழுந்ததில் மாணவிகள் உட்பட 85 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஈரான் பதில் தாக்குதல்: அமெரிக்கா, இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலைத் தொடங்கியது. இஸ்ரேலின் டெல் அவிவ், ஹைபா, ஜெருசலேம் நகரங்கள் மற்றும் வடக்கு, மத்திய, தெற்கு பகுதிகளில் உள்ள ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் 100-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசியது.

ரியாத், தோஹா, அபுதாபி, குவைத் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ, விமான, கடற்படைத் தளங்களை குறிவைத்து 400-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசியது. இதில் பெரும்பாலான ஏவுகணைகள் நடுவானில் இடைமறித்து அழிக்கப்பட்டன.





## முதலமைச்சருக்கு பிறந்தநாள்: பிரதமர் வாழ்த்து



**சென்னை, மார்ச்.2:**

தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று தந்து 73-வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். அவருக்கு அமைச்சர்கள், திமுக எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில், பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். அவர் நீண்ட ஆயுளும் நல்ல ஆரோக்கியமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## தங்கம், வெள்ளி விலை உயர்வு!

**சென்னை, மார்ச்.2:**

ஈரான் மீது அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுப் படைகள் அதிரடித் தாக்குதலை நடத்தி வருவதால், தங்கம் மற்றும் வெள்ளி விலை உயர்ந்துள்ளது.

வாரத்தின் இறுதி நாளான சனிக்கிழமை காலை தங்கம் விலை கிராமுக்கு ரூ.300 உயர்ந்து ரூ.15,200-க்கும், சவரனுக்கு ரூ.2,400 உயர்ந்து ரூ.1,21,600-க்கும் விற்பனையானது.

பின்னர், மாலை மீண்டும் கிராமுக்கு ரூ. 350 உயர்ந்து ரூ.15,550-க்கும், சவரனுக்கு ரூ.2,800 உயர்ந்து ரூ.1,24,400-க்கும் விற்பனையானது.

இதனிடையே, ஈரான் மீது அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருவதால், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை



சவரனுக்கு ரூ. 1,800 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,26,200-க்கும் கிராமுக்கு ரூ. 225 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 15,775-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதன்மூலம் 2 நாள்களில் தங்கம் விலை ரூ.7,000 உயர்ந்துள்ளது.

அதேபோல், வெள்ளி விலை கிராமுக்கு ரூ. 5 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 325-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 5,000 உயர்ந்து ரூ.3.25 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

## துபாய் மீது ஈரான் தாக்குதல் - சர்வதேச விமான நிலையத்தில் ஒருவர் பலி - பாம் ஜுமேராவில் தீ

**சென்னை, மார்ச்.2:**

அணுசக்தி போட்டி காரணமாக ஈரான் மீது இஸ்ரேல்-அமெரிக்கா நேற்று காலை முதல் ஏவுகணைகள் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் டெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.


தெஹ்ரானில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா காமேனி கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு அறிவித்துள்ளனர்.

இதற்கு பதிலடியாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியது.

மேலும், அந்த நாடுகளின் முக்கிய இடங்கள் மீதும் தாக்குதல் நடத்தியது. இந்த நிலையில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் 14 அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 100-க்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர் என ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் தாக்குதலால் துபாய் விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. புர்ஜ் கலிபாவில் இருந்து சுற்றுலா பயணிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

துபாயின் அபுதாபி



சயீத் சர்வதேச விமான நிலையத்தில் நடத்தப்பட்ட டிரோன் தாக்குதலில் ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஏழு பேர் காயமடைந்தனர். விமான நிலையத்திற்கு அருகில் பெரும் வெடிச்சத்தங்கள் கேட்டன.

மேலும் துபாயின் பாம் ஜுமேராவில் உள்ள பாம் ஹோட்டல் கட்டிடத்தில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். அதேபோல துபாய் சர்வதேச விமான நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சிறிய அளவிலான சேதம் ஏற்பட்டது. இதில் நான்கு ஊழியர்கள் காயமடைந்தனர்.

துபாயின் புகழ்பெற்ற புர்ஜ் அல் அரப் ஹோட்டல் மற்றும் பிற முக்கிய இடங்களிலும் பாதுகாப்பு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாம் யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது! பிறந்த நாளில் முதல்வர் ஸ்டாலின் உறுதிமொழி!

**சென்னை, மார்ச்.2:**

நாம் யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது என்று தன்னுடைய பிறந்த நாளில் உறுதிமொழி எடுத்துள்ளதாக முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"தமிழும் தமிழ்நாடும் நம் உயிர்! அவற்றைக் காப்பது நம் கடமை!

உழைப்பைத் தவிர வேறொன்று அறியேன் எனச் சொல்லி, இளமை முதல் 73-ஆம் வயது காணும் இந்நாள் வரையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணியாற்றுவதே என் வாழ்நாள் கடமை எனச் செயலாற்றி வருகிறேன்.

தமிழும் தமிழ்நாடும் தலைநிமிர்ந்த வரலாற்றில் நான் சிறுதொண்டனாய் இருந்தாலும், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் பெருந்தொண்டாற்றிடவே நினைக்கிறேன்.

அந்த உறுதியோடுதான், திராவிட மாடலில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில், இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன்.



கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் போய்ச் சேர்ந்துள்ளது திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும், சாதனைகளும்!

தனிக்குணம் கொண்ட தமிழர் தலைநிமிர்ந்து வாழ்கின்றனர்; நாட்டிற்கே புத்தொளியை வழங்குகின்றனர் என்று புகழும் வகையில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது!

நம் தமிழினத்தின் இலட்சியப் பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக் கூடாது; நம் தலை யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது!

சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத்திறத்தால் - நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும். இதற்காக என்னை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்வேன்.

இதுவே என் பிறந்தநாள் உறுதிமொழி!

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக!" என்று குறிப்பிட்டுள்ளார்.




## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசிமண்டலத்திருவிழா



**மதுரை, மார்ச் 02:** மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசிமண்டலத்திருவிழா காலை சுவாமி,அம்பாள் சட்டத்தேர் நாரணன் கொஞ்சும் புகழ் நான்முகற்கும், பொன் நாட்டவர்க்கும் காரணம் கொஞ்சும் நின் சிறு அடிக்கே திசை கட்டும் எட்டு வாரணம் கொஞ்சும் கடம்பு அடவியின் மகிழ்நருடன் ஆரணம் கொஞ்சும் அம்மே! மதுராபுரி அம்பிகையே!


குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை சொக்கே நின் தாளே துணை

## அன்னூர் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு



ஸ்ரீ ஆதி மேல் கிணத்து விநாயகர் கோவில் மேல்கிணறில் அன்னூர் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு 1986-1993 நடைபெற்றது. இதில் அம்பாள் நந்தகுமார் தலைமை தாங்கிட கண்ணன் குமார் ஆசிரியர் வாழ்த்துரை வழங்க நிகழ்ச்சியை கனகராம் துரைசாமி வேல்முருகன் மற்றும் குழுவினர் முன் நின்று நடத்த முன்னாள் மாணவர்கள் குடும்பத்துடன் சந்தித்து மகிழ்ந்தனர். காலையில் அனைவருக்கும் சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டது நிகழ்வில் "போயஸ் கார்டன் "பொன்விழி கலந்து கொண்டார்.

## சென்னைக்கு விரைவில் புல்லட் ரெயில் பிரதமர் மோடி அறிவிப்பு



**மதுரை, மார்ச் 02:** மதுரை விமான நிலையத்தில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்றுள்ள பிரதமர் மோடி வணக்கம் எனக்கூறி தனது உரையை தொடங்கினார்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, தமிழகத்திற்கு 9 வந்தே பாரத் ரெயில் வழங்கப்பட்டது, புதிதாக 77 ரெயில் நிலையங்கள் சீரமைக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி பேசினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:- காங்கிரஸ் ஆட்சியில் வழங்கப்பட்டதைவிட தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு 9 மடங்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.880 கோடி, பாஜக ஆட்சியில் ரூ7600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டதால் 1,300 கி.மீக்கு அதிகமாக ரெயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளது. தமிழக உள்கட்டமைப்பிற்கு வழங்கப்படும் நிதி 3 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நேற்று புனரமைக்கப்பட்ட 8 ரெயில் நிலையங்களை திறந்து வைத்துள்ளேன். பெங்களூரு- சென்னை, ஐதராபாத்-சென்னை இடையில் புல்லட் ரெயில் திட்டங்கள் வர உள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மண்டபம் அருகே சேது வித்யாலயா பள்ளியில் 19-வது ஆண்டு விழா



**மண்டபம், மார்ச் 02:** மண்டபம் அருகே சேதுவித்யாலயா பள்ளியின் 19-வது ஆண்டு விழா நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே குஞ்சார் வலசையில் உள்ள சேதுவித்யாலயா பள்ளியில்19-வது ஆண்டு விழா நடைபெற்றது.

பள்ளியின் தாளாளர் ஆடல் அரசன் தலைமையில் பள்ளி பொறுப்பாளர் சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் பள்ளி முதல்வர் கவிதா வரவேற்புரையாற்றி ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு ப்ரைமரி, மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்சி பள்ளிகள் நலச்சங்க மாநில துணை பொதுச் செயலாளர் சண்முகம், சத்திரக்குடி வாசன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் வாசன், ராமேஸ்வரம் நேசனல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் செந்தில் குமார், விவேகானந்தர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் தீனதயாளன் மற்றும் எவர்கிரீன் மெட்டல் பன்னாட்டு நிறுவனத்தின் இந்திய வணிக நிறுவன இயக்குனர் முனீஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பள்ளியில் 1 முதல் 3-ம் இடம் பிடித்த மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

மேலும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. யோக போட்டியில் கலந்து கொண்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற 8 மாணவர்களுக்கு எவர்கிரீன் மெட்டல் பன்னாட்டு நிறுவனம் சான்றிதழ்களுடன் பரிசுகளை வழங்கி அவர்கள் உயர்கல்வி முடித்தவுடன் வேலை வாய்ப்புக்கான உத்திரவாதமும் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில் குஞ்சார் வலசை கிராமத் தலைவர் காளிமுத்து, செயலாளர் ஓம் பிரகாஷ், தனியார் பள்ளி தாளாளர்கள் முதல்வர்கள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



**சென்னை, மார்ச் 02:** வடசென்னை கிழக்கு மாவட்டத் தலைவர் மதுரம்மா கனி பாரூக் அவர்களின் ஆணைக்கிணங்க3 சர்க்கிள் தலைவர் வால் டாக்ஸ் ரோடு ரமேஷ் அவர்களின் அறிவுறுத்தலின்படி திருs சண்முகம் வடசென்னை மாவட்ட துணைத் தலைவர் திரு தலித் முருகேசன் வடசென்னை மாவட்ட துணைத் தலைவர் திரு தில்லை ராஜ் வட்டத் தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்தனர்

## "புதுச்சேரி படைப்பாளர் இயக்கம்" நடத்திய முதியோர் விழா, மற்றும் விருது வழங்கும் விழா



"புதுச்சேரி படைப்பாளர் இயக்கம்" நடத்திய முதியோர் திருவிழாவின் சார்பான பாப் போட்டியில், கலந்து கொண்ட கவிஞர் செ.புதூர் இல. ரவி அவர்களுக்கு 28.2.2006 அன்று விருது வழங்கப்பட்டது. **செய்தி: குடந்தை பரிபூரணன்.**

## திரையுலக பிரபலங்களின் ஆன்மீக மையமாக மாறிய திருவண்ணாமலை கோவில்



**திருவண்ணாமலை, மார்ச் 02:** சமீபத்தில் முன்னணி பிரபலங்கள் பலர் குடும்பத்தினருடன் நேரில் வந்து அண்ணாமலையாரை தரிசனம் செய்து வருகின்றனர். திரை உலகமும், ஆன்மீகமும் வேறு பாதைகள் போல தோன்றினாலும் மனநிம்மதி, நம்பிக்கை, வெற்றி போன்ற உணர்வுகளில் திரை உலகம் ஆன்மீகத்தின் பாதையில் தான் செல்கிறது.

**ரஜினி:** திருவண்ணாமலை கோவிலின் தீவிர பக்தர் ஆவார். ஆரம்பத்தில் திருவண்ணாமலை கிரிவல பாதைக்கு விளக்கு போட்டு தந்தவர் என்ற பெருமையும் ரஜினிக்கு உண்டு.

**சிவகார்த்திகேயன்:** நடிகர் சிவகார்த்திகேயன் கடந்த 17-ந்தேதி தனது பிறந்தநாளையொட்டி மனைவி ஆர்த்தியுடன் திருவண்ணாமலை கோவிலில் தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் சார்பில் சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது.

**ரவிமோகன்:** நடிகர் ரவிமோகனும் பாடகி கெனிஷாவும் கடந்த ஜனவரி மாதம் அண்ணாமலையார் கோவிலில் தரிசனம் செய்தனர்.

**யோகிபாபு:** யோகிபாபு அடிக்கடி திருவண்ணாமலை கோவிலுக்கு சென்று வருகிறார்.

**சரத்குமார்:** சரத்குமார் சில தினங்களுக்கு முன்பு திருவண்ணாமலை கோவிலில் தரிசனம் செய்து தொடர்ந்து கிரிவல பாதையில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

**தேவயானி:** தேவயானி கடந்த ஜனவரி மாதம் திருவண்ணாமலை கோவிலில் தரிசனம் செய்தார்.

## தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம்



**போளூர், மார்ச் 02:** போளூர் தெற்கு ஒன்றியம் இடம்: வசூர் ஊராட்சி 1.3.26 காலை கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு போளூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போளூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அண்ணன் திரு K.V.சேகரன்ExMLA அவர்கள் தலைமையில் வசூர் ஊராட்சியில் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞரணி,மாணவரணி, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கிளை கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இளையான்குடி பகுதியில் தமிழக முதல்வர் முக ஸ்டாலின் பிறந்த நாள் விழா



**மானாமதுரை, மார்ச் 02:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய பேரூர் திமுக சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இளையான்குடியில் பொதுமக்களுக்கு கேக் வெட்டி இனிப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் பேரூராட்சி துணைத் தலைவர் டி கே இப்ராஹிம் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் சுப தமிழரசன் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி மாவட்ட பிரதிநிதிகள் உதயசூரியன், சாருஹாசன், ராஜபாண்டி மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன், ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் பெரியசாமி,தௌலத், குழந்தை பாண்டியன், சிவனேசன், இராஜேந்திரன், முருகேசன், பிரபு,ஜெயினுலாபுதீன், கம்பன் காதர், இப்ராஹிம் ஷா, காதர், வெற்றி இளங்கோவன், நீலமேகம், பாலாஜி ,பஞ்சவர்ணம், புனிதா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## All The Best- பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து




**சென்னை, மார்ச் 02:** நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையின் பாடத்திட்டங்களை பின்பற்றக்கூடிய பிளஸ்-2 வகுப்புக்கான பொதுத்தேர்வு நாளை முதல் தொடங்க இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 7,545 பள்ளிகளில் இருந்து 7 லட்சத்து 99 ஆயிரத்து 692 மாணவர்கள் இந்த தேர்வை எழுத உள்ளனர்.

இன்று பொதுத்தேர்வு எழுத உள்ள மாணவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

இன்று பொதுத்தேர்வை எழுதவுள்ள பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும், எதிர்வரும் 11-ஆம் தேதி முதல் பொதுத்தேர்வு எழுதவுள்ள பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும் வாழ்த்துகள்!

பதற்றமின்றித் தேர்வை எதிர்கொண்டு வெற்றி பெறுங்கள். உங்களுக்கான வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. உறுதியுடன் படித்திடும் உங்களுக்கு ஊக்கமளித்து உயர்த்திட நமது திராவிட மாடல் அரசு இருக்கிறது.

AllTheBest என்று கூறியுள்ளார்.

## இன்று மாசி மகம்: விரதம் இருந்து புனித நீராடி வழிபட்டால் தோஷம் நீங்கி புண்ணியம் கிடைக்கும்



மாசி மாதத்தில் வரும் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்று மாசி மகம். மாசி மாதத்தில் வரும் மகம் நட்சத்திரமும், பவுர்ணமியும் இணைந்து வரும் நாளில் மாசி மகம் கொண்டாடப்படுவது வழக்கம். கோவில்களில் மட்டுமல்ல, நீர் நிலைகளிலும் பக்தர்கள் விழா எடுத்து கொண்டாடும் பண்டிகையாக மாசி மகம் கருதப்படுகிறது.

இன்று காலை 8.17 மணிக்கு தொடங்கி, மறுநாள் 3-ந்தேதி காலை 8.07 மணி வரை மகம் நட்சத்திரம் உள்ளது. ஆனால் நாளை மாலை 6.29 மணிக்கு தான் பவுர்ணமி தொடங்குகிறது. 3-ந்தேதி மாலை 5.52 மணி வரை பவுர்ணமி திதி உள்ளது.

மகம் நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நாளை மாசி மகம் கொண்டாடப்படுகிறது. மாசி மகத்தன்று நீர் நிலைகளான ஆறுகள், ஏரிகள், கடற்கரைகள் என அனைத்து நீர் நிலைகளிலும் தெய்வீக சக்தி அதிகரித்து காணப்படும் நாள் மாசி மகம் ஆகும். இந்த நாளில் பெரும்பாலான கோவில்களில் தீர்த்தவாரி உற்சவம் நடத்தப்படும். மாசி மகத்தில் கும்பகோணம் நகரில் உள்ள மகாமகம் குளத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, காவிரி, சிந்து உள்ளிட்ட புண்ணிய நதிகள் எழுந்தருளுகின்றன என்று நம்பப்படுகிறது. இதனால் அன்றைய தினம் மகாமகம் குளத்தில் நீராடினால் அனைத்து புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும் என்றும், முன்பிறவிப் பாவங்கள் நீங்கும்.

இதனால் தான் மாசி மகம் 'கடலாடும் நாள்', 'தீர்த்தமாடும் நாள்' என அழைக்கப்படுகிறது. நீர் நிலைகளில் தெய்வீக தன்மை அதிகம் உள்ளதால் தெய்வங்களே தங்களின் ஆற்றலை புதுப்பிக்கும் நாளாகவும் இந்த நாள் கருதப்படுகிறது. முப்பத்து முக்கோடி தேவர்களும் பக்தர்களை ஆசீர்வாதம் செய்வதற்காக பூமிக்கு வரும் நாளாக மாசி மகம் கருதப்படுகிறது.

இதனால் இந்த நாளில் புதிய விஷயங்கள் தொடங்குதல், தர்ம காரியங்கள் செய்வது, விழா எடுத்து கொண்டாடுவது என எதை செய்தாலும் அது தெய்வீக அருளால் பல மடங்கு அதிக பலனை தரும்.

பார்வதி தேவி 'தாட்சாயிணி' என தட்சனின் மகளாக அவதரித்ததும் மாசி மகம் அன்று எனப்படுகிறது. அதனால் இந்த நாளில் அம்பிகைக்கு குங்குமம், சரஸ்வதி தேவிக்கு வாசனை மலர்கள் ஆகியவற்றை படைத்து வழிபட்டால் மகிழ்ச்சி, வெற்றி, ஞானம் ஆகியவை பெருகும் என்கின்றனர் ஆன்மீக பெரியவர்கள்.

அதேபோல் மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்ததும் மாசி மகத் தினத்தில்தான் எனச் சொல்லப்படுகிறது. எனவே, மாசி மகத் தினத்தில் சிவபெருமான் வழிபாட்டுடன் அம்பாள், முருகன், மகாவிஷ்ணு வழிபாடும் சிறப்பாக நடைபெறுகிறது. மாசி மகத்தில் விரதம் இருப்பவர்கள் அதிகாலை எழுந்து புனித தீர்த்தங்களில் நீராடி சிவாலயங்களுக்கு சென்று வழிபட வேண்டும். மதியம் ஒருவேளை சாப்பிட்டு, இரவில் பால், பழம் எடுத்துக்கொள்ளலாம். அன்றைய தினம் தேவாரம், திருவாசகம் போன்ற பாடல்களை பாராயணம் செய்து இறை சிந்தனையில் ஈடுபடுவது சிறப்பாகும். இந்த விரதத்தை கடைப்பிடிப்பவர்களுக்கு குழந்தைப் பாக்கியம், குடும்ப ஒற்றுமை, சகல தோஷ நிவர்த்தியுடன் புண்ணியம் சேரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. மாசி மகம் என்பது சதுர்த்தசி பிரதானம், நட்சத்திரப் பிரதானம், பவுர்ணமி பிரதானம் என்று ஒவ்வொருபகுதியிலும் ஒவ்வொரு விதமாக அனுஷ்டிக்கப்படுகிறது. பொதுவாக 11 மணிக்கு மேல் 12 மணிக்குள் நீராடி வழிபடுவது கூடுதல் பலனை அளிக்கும்.

வருணனின் சாபக்கட்டை சிவபெருமான் அவிழ்த்துக் காத்ததால் அன்று நீராடி, சிவ பெருமானை வணங்கினால் அருமையான பலன்கள் கிட்டும். குறிப்பாக, சிம்ம ராசிக்காரர்களும் மகம் நட்சத்திரத்துக்கு உரியவர்களும் நீராடி சிவபெருமானை வழிபடுதல் நல்லது. மாசி மகம் அன்று நதிகளில் நீராடுவதை 'பிதுர்மகா நீராடல்' என்றும் கூறுவார்கள். மகம் நட்சத்திரத்துக்கு 'பித்ருதேவா நட்சத்திரம்' என்ற பெயரும் உண்டு. இந்தப் பித்ருதேவா தான் முன்னோர்களுக்கு ஆன்ம சாந்தியை அளிப்பவர்.

முன்னோர்கள் ஆத்ம சாந்தியுடன் இருந்தால் அனைத்து நன்மைகளும் கிடைக்குமென்பது நம்பிக்கை. மற்ற தினங்களில் பித்ருக்களை வழிபடாவிட்டாலும், மாசிமகத்தின் போது நீராடி பித்ருக்களை வணங்கினால் முன்னோர்கள் ஆத்மசாந்தி பெற்று, நமக்கும் நம் சந்ததியினருக்கும் அருள்புரிவார்கள்.

















































**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

7540003588





**WANTED**

Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872

# கவிதை அரங்கம்!






ஜன்னலை
பூட்டியபின்னும்
காட்சியை
ரசிக்க தவறாத
விழிகளைபோல்
மனதை பூட்டியபின்னும்
உன் நினைவுகளை
நினைக்க தவறியதில்லை
மனம்...

செல்லும்
இடமெல்லாம்
வந்து விடுகின்றாய்
நிலவைபோல்
நீயும் நினைவில்

உதிரா மலராய்
நீ மனதில்
மலர்ந்திருக்க
இந்த உதிரும்
மலரும் ஏனோ

உன்னால்
தண்டனை
அனுபவிக்கின்றது
நகமும் கொஞ்சம்
திருப்பிக்கொள்
உன் பார்வையை

## வாழ்க்கை தத்துவம்...



ஒவ்வொரு இதயத்திலும் ஏதாவது ஒரு வலி இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை முட்டாள்கள் கண்களிலும், அறிவாளிகள் புன்னகையிலும் மறைத்துக் கொள்கிறார்கள்.

உங்கள் எண்ணங்கள் எப்படியோ அப்படித்தான் வாழ்க்கையும் அமையும். எனவே சிறந்ததையே எண்ணுங்கள்.

அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது, அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது, அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

உங்கள் எண்ணம் பண்பட்டு இருந்தால் உங்களுக்கு கெட்ட எண்ணங்களே தோன்றாது. இதனால் உங்கள் சொல்லும், செயலும் தன்னாலேயே பண்பட்டுவிடும். இதனால் உங்கள் எண்ணங்களின் மேல் அதிக கவனம் செலுத்தவேண்டியது இன்றியமையாதது.

# "அந்த டி.வி.எஸ்-50 சத்தம்"



கல்லூரி கேண்டீன். குமார்வநண்பர்களுடன் ஜாலியாய் காஃபி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"ஹேய் குமார்... வாட் ஈஸ் யுவர் ஃபாதர் யா?" நண்பன் கேட்க,

"என் அப்பாவா? சும்மா... ஒரு சாதாரண வியாபாரி... ஊரு ஊராய்ப் போய் துணிமணிக விற்கிறாரு."இதைச் சொல்லும் போது, அவன் குரலில் இருந்தது வெட்கம்.

டி.வி.எஸ்-50யின் பின்புறம் அட்டைப் பெட்டிகளில் குழந்தைகளின் சட்டைகள், சேலைகள், பெண்களின் உள்ளாடைகள் போன்றவற்றைத் தூக்கிக் கொண்டு வீடு வீடாகச் சென்று "அக்கா... புது டிசைன் வந்துருக்கு... வந்து பாருங்க" என்று கூப்பிடும் மனிதர் அவன் தந்தை.

மாலை வீடு திரும்பும் போது
வெயிலால் கருத்த முகம், கை,கால்களில் தூசி. ஆனா கண்ணில் மட்டும் ஒளியோடு வருவார்.

"மகனே, நீ டிகிரி முடிச்சு நல்ல உத்தியோகத்துக்குப் போகணும்... அதுக்காகத்தான் நான் இத்தனை கஷ்டப்படறேன்.

குமார் எரிச்சலோடு தலையசைத்தான். அவன் மனதில் ஒரே எண்ணம்,
" கருமம்... எப்படியாவது இந்த டி.வி.எஸ்-50 சத்தத்திலிருந்து தப்பிக்கணும்"

ஆனால், வாழ்க்கை வண்டி நேராகவே ஓடுமா?

ஒரு மாலை டி.வி.எஸ்50 திரும்பவில்லை.

வழியிலே மாரடைப்பு. சவம் மட்டுமே ஆம்புலன்ஸில் வந்தது.

தந்தையின் சாவிற்குப் பின் குமாரின் டிகிரி பாதியில் நின்றது. வேலை தேடினான்.

"டிகிரி முடிக்கலையா?", கேட்டு விட்டு கதவுகள் மூடப்பட்டன.

கடன்காரர்கள் மட்டும் கதவு தட்டினர்.

பொறுக்க மாட்டாத தாய் மெல்லச் சொன்னாள், "வண்டி அப்படியே நிக்குது... வியாபாரம் நின்னுட்டா நாம எப்படிப்பா பொழைக்கறது?"

குமார் கோபத்தில் கத்தினான். "நான் அதை ஓட்ட மாட்டேன்!"

தாய் அமைதியாகச் சென்றாள்.

அடுத்த வாரம், கடைக்காரன் கடன் தொகையைக் கேட்டு அவமானப்படுத்திய பிறகு, குமார் மெதுவாக அந்த வண்டியை நிமிர்த்தினான்.

கிக்கரை உதைத்தான். முதல் தடவை ஸ்டார்ட் ஆகவில்லை.

இரண்டாம் தடவை, "டட்... டட்... டட்..."

அந்த சத்தம் காதில் விழுந்தவுடன் அவன் கண்களில் நீர் நிரம்பியது.

அது வண்டிச் சத்தமில்லை.அவன் தந்தையின் மூச்சு.

முதல் வீட்டின் கதவைத் தட்டினான்.

"அக்கா... துணிமணிக பார்க்கறீங்களா...?"

" வேண்டாம்ப்பா"

மூன்று வீடுகள். நான்கு வீடுகள், ஐந்து வீடுகள்.

சிலர் கதவு மூடினர். சிலர் விலையை அநியாயத்திற்குக் குறைத்தனர். சிலர் இழிவாய் பார்த்தனர்.

அந்த மாலையில் தான் அவன் புரிந்து கொண்டான் அவன் தந்தை சம்பாதித்தது பணம் மட்டும் அல்ல. அவமானத்தை விழுங்கும் தைரியம்.

இரவு வீட்டிற்கு வந்து அந்த நாளின் பணத்தை தாயின் கையில் வைத்தான்.

"அம்மா... நம்ம அப்பா பெரிய வியாபாரிம்மா."

அடுத்த நாள், அதிகாலையிலேயே எழுந்து வியாபாரத்துக்குக் கிளம்பினான்.

அவன் வண்டியை ஸ்டார்ட் செய்ய, "டட்... டட்... டட்..."

இப்போது அந்த சத்தம் அவனுக்கு அவமானமில்லை. மரியாதை.
(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஆசிரியர்: தைக்கும் சித்திரைக்கும் என்ன வித்தியாசம்?*

*மாணவன்: தை மாசம் நாம சூரியனுக்கு பொங்கல் வைப்போம்.. சித்திரை மாசம் சூரியன் நம்மள பொங்கல் வைக்கும்*

*ஆசிரியர்: ???*



# தினம் ஒரு சமையல்



## வெண்டைக்காய் பொடிக் கறி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| வெண்டைக்காய் | -1/2 கி |
| ம.தூள் | -3/4 டீ ஸ்பூன் |
| ன்தனி மி.தூள் | -1 ஸ்பூன் |
| ன்கறிப் பொடி | -1 ஸ்பூன் |
| உப்பு | -ருசிக்கு |
| **தாளிக்க:-** | |
| ன்கடுகு | -1 டீ ஸ்பூன் |
| ன்உ.பருப்பு | -1 ஸ்பூன் |
| வேப்பிலை | -1 ஆர்க்குகறி |
| ன்எண்ணெய் | -3 ஸ்பூன் |
| தண்ணீர் | -தேவையான அளவு |

செய்முறை:



தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

வெண்டைக்காயை சுத்தம் செய்து பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

அடுப்பை மிதமான தீயில் வைத்து, கடாயில் எண்ணெய் விட்டு சூடானதும், கடுகு, உ.பருப்பு, கறிவேப்பிலை போட்டு தாளிக்கவும்.

தாளித்ததும், நறுக்கின வெண்டைக்காய், ம.தூள், உப்பு, மிளகாய் தூள் சேர்த்து நன்கு வதக்கவும்.

5

பிறகு கறிப் பொடி போட்டு 2 நிமிடம் ஒன்று சேர கிளறி வெந்ததும் அடுப்பை நிறுத்தி விட்டு இறக்கவும்.

இறக்கியதும், பௌலுக்கு மாற்றவும்.

இப்போது, சுவையான, சுலபமான,*வெண்டைக்காய் பொடிக் கறி*தயார்.செய்து பார்த்து அசத்தவும்.

## முருங்கை பயன்கள்



முருங்கை, வைட்டமின்கள் A, C, கால்சியம் மற்றும் இரும்புச்சத்து நிறைந்த ஒரு சூப்பர்ஃபுட் ஆகும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல், எலும்புகளை வலுப்படுத்துதல், இரத்த சோகையைத் தடுத்தல் மற்றும் செரிமானத்தை மேம்படுத்துதல் போன்ற ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது. இதன் இலைகள், பூக்கள் மற்றும் காய்கள் அனைத்தும் சத்துக்கள் நிறைந்தவை.

முருங்கையின் முக்கிய மருத்துவப் பயன்கள்:

ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி: ஆரஞ்சை விட 7 மடங்கு வைட்டமின் C மற்றும் பாலை விட 17 மடங்கு கால்சியம் கொண்டது. இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

இரத்த சோகை மற்றும் உடல் பலம்: இரும்புச்சத்து நிறைந்துள்ளதால் இரத்த சோகையைத் தடுக்கிறது. முருங்கைக் கீரை மற்றும் பூவை உணவில் சேர்த்துக் கொள்வது உடல் பலத்தைக் கொடுக்கிறது.

எலும்பு மற்றும் கண் ஆரோக்கியம்: இதில் உள்ள கால்சியம் மற்றும் மெக்னீசியம் எலும்பு ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது. வைட்டமின் A சத்து கண்பார்வையை மேம்படுத்துகிறது.

நீரிழிவு மற்றும் இதய ஆரோக்கியம்: முருங்கை இலைகள் இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும், இதய நோய்கள் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

செரிமானம் மற்றும் எடை இழப்பு: முருங்கையில் உள்ள நார்ச்சத்து செரிமானத்தை மேம்படுத்துகிறது, குறைந்த கலோரி கொண்டதால் எடை மேலாண்மைக்கு உதவுகிறது.

பாலூட்டும் தாய்மார்களுக்கு: முருங்கைக் கீரையை பூண்டுடன் சேர்த்து உண்பது பால் சுரப்பை அதிகரிக்கிறது.

வீக்கம் மற்றும் வலி: முருங்கை இலைகள் மற்றும் பொடி, உடலில் ஏற்படும் வீக்கங்கள் மற்றும் வலிகளைக் (ARTHRITIS) குறைக்க உதவுகின்றன.

முருங்கையை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்வது (கீரை, சூப், பொடி) ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும்.

# திருமணத்தில் ராஷ்மிகா அணிந்திருந்த தங்க நகைகளின் மதிப்பு எவ்வளவு தெரியுமா..? இதோ



நடிகை ராஷ்மிகா மந்தனா - நடிகர் விஜய் தேவரகொண்டா திருமணம் கடந்த 26ஆம் தேதி உதய்பூரில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. திருமண புகைப்படங்களை நடிகை ராஷ்மிகா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். இந்த பதிவுக்கு தற்போது வரை 23.7 மில்லியன் லைக்ஸ் கிடைத்துள்ளது.

ராஷ்மிகா - விஜய் தேவரகொண்டா இருவரும் தங்களது திருமணத்தில் அணிந்திருந்த உடை மற்றும் தங்க நகைகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இந்த நிலையில், தனது திருமணத்தில் நடிகை ராஷ்மிகா மந்தனா அணிந்திருந்த தங்க நகைகளின் மதிப்பு குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, அவர் அணிந்திருந்த தங்க நகைகளின் மதிப்பு ரூ. 4 கோடி முதல் ரூ. 7 கோடி வரை இருக்கும் என தெரியவந்துள்ளது. 2 முதல் 3 கிலோ வரை எடை கொண்ட இந்த தங்க நகைகளை தயாரிக்க 10 மாதங்களுக்கும் மேல் ஆகியுள்ளது.

இதை ஹைதராபாத்தை சேர்ந்த நகை வடிவமைப்பாளரால் தனிப்பட்ட முறையில் தயாரித்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

## சினிமா



தர்ஷா குப்தா இன்ஸ்டாவில் தொடர்ந்து ஹாட் போட்டோக்களாக வெளியிட்டு வருகிறார்.

தற்போது அவர் வெளிநாட்டில் சேலையில் உச்சகட்ட ஹாட் போஸ் கொடுத்த புகைப்படங்களைப் பாருங்க.

# ரீ-ரிலீஸாகியுள்ள தெறி படம் இரண்டு நாட்களில் செய்துள்ள வசூல்.. இதோ



அட்லீ - விஜய் கூட்டணியில் முதல் முறையாக உருவான திரைப்படம் தெறி. கடந்த 2016ஆம் ஆண்டு வெளிவந்த இப்படத்தை கலைப்புலி எஸ். தாணு தயாரிக்க ஜி.வி. பிரகாஷ் இசையமைத்திருந்தார்.

இப்படத்தில் சமந்தா, ஏமி ஜாக்சன், நைனிகா, மொட்டை ராஜேந்திரன் என பலரும் நடித்திருந்தனர். மேலும் இயக்குநர் மகேந்திரன்இப்படத்தில் வில்லனாக நடித்து மிரட்டியிருந்தார்.

2016ஆம் ஆண்டு பிளாக்பாஸ்டரான இப்படத்தை 10 ஆண்டுகள் கழித்து தற்போது ரீ-ரிலீஸ் செய்துள்ளனர்.

கில்லி, சச்சின் படத்தை போலவே இப்படத்திற்கும் மாபெரும் வரவேற்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது நடக்கவில்லை.

இதனால் வசூலும் மிகக்குறைவாகத்தான் வந்துள்ளது. இரண்டு நாட்களை பாக்ஸ் ஆபிஸில் கடந்துள்ள தெறி ரீ-ரிலீஸ் இதுவரை உலகளவில் ரூ. 90 லட்சம் மட்டுமே வசூலித்துள்ளது.

# "ஓம்" எனும் மந்திரம் - உடலுக்குத் தேவையான ஆற்றல் உள்ளது





1. உலகளாவிய ஒலியான ஓம் என்னும் மந்திரம் ' ஆ ' , 'ஓ ' ,'ம்' ஆகிய மூன்று அசைகளால் உருவானது .

நாம்

'ஆ' என்று ஓசை எழுப்பும்போது உடம்பின் கீழ் பகுதி முதல் வயிற்றுப் பகுதிவரை இயக்கம் பெறுகிறது.

'ஓ' என்று உச்சரிக்கும்போது மார்புப் பகுதிகள் இயக்கம் பெறுகின்றன.

'ம்' என்று ஒலி முகத்தசைகள் மற்றும் மூளைப் பகுதியைத் தூண்டும்.

2. 'ஓம்' எனும் மந்திரம் நம்மை தியான நிலைக்குக் கொண்டு செல்கிறது. உடலையும் மனதையும் தளர்த்தி, ஆற்றலை சேமிக்கச் செய்கிறது.

3.எண்ண ஓட்டங்களையும், கவனச்சிதறல்களையும் சரிப்படுத்தி மனதை ஒருமுகபடுத்துகிறது.

4. ஓம் என்னும் மந்திரத்தை, 11 முதல் 18 முறை உச்சரித்துவிட்டுச் தூங்கசென்றால், ஆழமான உறக்கம் கிடைக்கும். ஆழ்ந்த உறக்கத்தில்தான் மூளைக்கு அவசியமான 'மெலடோனின்' என்ற ஹார்மோன் சுரக்கிறது.

5. இது உங்களை எதிர்மறை எண்ணங்களில் இருந்து வெளிகொண்டுவந்து நேர்மறை எண்ணங்களைப் பெருக்குகிறது.

6. இந்த மந்திரத்தை உச்சரிப்பதால் உடலுக்கு அதிகப்படியான ஆக்சிஜன் கிடைப்பதோடு, ரத்த ஓட்டமும் சீராகிறது. இதயமும் செரிமான மண்டலமும் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவுகிறது.

7. கவலைகள் மற்றும் பதற்றத்தால் பல நேரங்களில் கோபம், வருத்தம், விரக்தி, ஏமாற்றம் ஆகியவற்றை நாம் வெளிப்படுத்துகிறோம். பின்பு, அதன் விளைவுகளை எண்ணி வருந்துகிறோம். 'ஓம்' என்று உச்சரித்துவர நாளடைவில் நம் எண்ணங்களின் மீது சுயக்கட்டுப்பாடு அதிகரிக்கிறது. இதனால், தேவையற்ற சிந்தனைகள், எண்ணங்கள், உணர்வுகள் உருவாவது தடுக்கப்படுகிறது.

8. சோர்வாகவும், களைப்பாகவும், பணியில் சரியான கவனம் செலுத்த முடியாமலும் இருப்பவர்கள், தினமும் காலை எழுந்தவுடன் 20 நிமிடங்கள் 'ஓம்' என்ற மந்திரத்தைச் சொல்லிவர மூளையில் 'எண்டார்பின்' என்னும் ஹார்மோன் சுரப்பு அதிகரிக்கிறது. இதனால், நாள் முழுதும் உற்சாகமான, மகிழ்ச்சியான மனநிலை கிடைக்கும்.

9. 'ஓம்' மந்திரத்தை தொடர்ந்து சொல்லிவர, ஹார்மோன் குறைபாடுகள் சரியாகும். மாதவிடாய் காலங்களில் மற்றும் மெனோபாஸ் காலங்களில் மன ஊசலாட்டம் (மூட் ஸ்விங்ஸ்) கட்டுப்படும்.

10. 'ஓம்' என்று தொடர்ந்து உச்சரித்துக்கொண்டிருந்தால், உடலுக்குத் தேவையான ஆற்றல் கிடைத்து, நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாவதுடன், இன்சுலின் சுரப்பும் சீராக உள்ளது என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிந்துள்ளது.



- சிவசக்தி
நாப்பிராம்பட்டி,
ஊத்தங்கரை
கிருஷ்ணகிரி மாவட்டம்

## தினம் ஒரு தலைவர்கள் அருணா ஆசப் அலி வரலாறு

அருணா ஆசஃப் அலி ( நீ கங்குலி ) ( வங்காள உச்சரிப்பு: 16 ஜூலை 1909 - 29 ஜூலை 1996) ஒரு இந்திய கல்வியாளர், அரசியல் ஆர்வலர் மற்றும் வெளியீட்டாளர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்ற இவர் , 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயின் கோவாலியா டேங்க் மைதானத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றியதற்காக பரவலாக நினைவுகூரப்படுகிறார் . சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் அரசியலில் தீவிரமாக இருந்தார், டெல்லியின் முதல் மேயரானார்.

### ஆரம்ப கால வாழ்க்கை

அருணா அசாஃப் அலி ஜூலை 16, 1909 அன்று பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாபில் உள்ள கல்காவில் (இப்போது ஹரியானா , இந்தியா) ஒரு வங்காள பிராமண குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை உபேந்திரநாத் கங்குலி கிழக்கு வங்காளத்தின் (இப்போது வங்காளதேசம் பரிசால் மாவட்டத்தைச் சேர்ந்தவர், ஆனால் ஐக்கிய மாகாணத்தில் குடியேறினார். அவர் ஒரு உணவக உரிமையாளராக இருந்தார். அவரது தாயார் அம்பலிகா தேவி, பல பிரம்மோ பாடல்களை எழுதிய புகழ்பெற்ற பிரம்மோத் தலைவர் த்ரைலோக்யநாத் சன்யாலின் மகள் . உபேந்திரநாத் கங்குலியின் தம்பி தீரேந்திரநாத் கங்குலி (டிஜி) ஆரம்பகால திரைப்பட இயக்குனர்களில் ஒருவர். [ 4 ] மற்றொரு சகோதரர் நாகேந்திரநாத், நோபல் பரிசு வென்ற ரவீந்திரநாத் தாகூரின் ஒரே மகள் மீரா தேவியை மணந்த பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தார் . [ 5 ] அருணாவின் சகோதரி பூர்ணிமா பானர்ஜி இந்திய அரசியலமைப்பு சபையின் உறுப்பினராக இருந்தார் .

அருணா லாகூரில் உள்ள சேக்ரட் ஹார்ட் கான்வென்ட்டிலும் , பின்னர் நைனிடாலில் உள்ள ஆல் செயிண்ட்ஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார் . பட்டம் பெற்ற பிறகு, கல்கத்தாவில் உள்ள கோகலே நினைவுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார் . காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஆசஃப் அலியை அலகாபாத்தில் சந்தித்தார் . மதம் மற்றும் வயது அடிப்படையில் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி (அவர் ஒரு முஸ்லிம் மற்றும் அவரை விட 20 வயது மூத்தவர்) அவர்கள் 1928 இல் திருமணம் செய்து கொண்டனர்.

1928 செப்டம்பரில் ஆசாஃப்பும் நானும் திருமணம் செய்துகொண்டபோது என் தந்தை இல்லை. என் தந்தைவழி மாமா நாகேந்திரநாத் கங்குலி, ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர், தன்னை என் பாதுகாவலராகக் கருதினார், அவர் உறவினர்களிடமும் நண்பர்களிடமும், அவரைப் பொறுத்தவரை நான் இறந்துவிட்டேன் என்றும், அவர் என் ஷ்ரத்தாவைச் செய்துவிட்டார் என்றும் கூறினார்.

### வாழ்க்கை மற்றும் தொழில் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு பங்களிப்பு

இந்திய சுதந்திர இயக்கத்தில் அருணா ஆசஃப் அலி முக்கிய பங்கு வகித்தார். ஆசஃப் அலியைத் திருமணம் செய்து கொண்ட பிறகு இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினரானார் , உப்பு சத்தியாக்கிரகத்தின் போது பொது ஊர்வலங்களில் பங்கேற்றார் . 21 வயதில் அவர் ஒரு நாடோடி என்று குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் , எனவே 1931 ஆம் ஆண்டு காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். மற்ற பெண் சக கைதிகள் அவர் விடுவிக்கப்படும் வரை வளாகத்தை விட்டு வெளியேற மறுத்து, மகாத்மா காந்தி தலையிட்ட பின்னரே சரணடைந்தனர் . ஒரு பொதுப் போராட்டம் அவரை விடுதலை செய்தது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முக்கியத்துவம் பெறுதல் ஆகஸ்ட் 8, 1942 அன்று, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாய் அமர்வில் வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றியது . அரசாங்கம் முக்கிய தலைவர்களையும் காங்கிரஸ் செயற்குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் கைது செய்து , இயக்கத்தை வெற்றியிலிருந்து தடுக்க முயன்றது. ஆகஸ்ட் 9 அன்று அமர்வின் மீதமுள்ள பகுதிக்கு இளம் அருணா ஆசஃப் அலி தலைமை தாங்கினார் மற்றும் கோவாலியா டேங்க் மைதானத்தில் காங்கிரஸ் கொடியை ஏற்றினார். இது இயக்கத்தின் தொடக்கத்தைக் குறித்தது. அமர்வில் காவல்துறையினர் சட்டமன்றத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆபத்தை எதிர்கொண்ட துணிச்சலுக்காக அருணா 1942 இயக்கத்தின் ராணி என்று அழைக்கப்பட்டார், மேலும் அவரது பிற்காலங்களில் சுதந்திர இயக்கத்தின் கிராண்ட் ஓல்ட் லேடி என்று அழைக்கப்பட்டார் . நேரடித் தலைமை இல்லாத போதிலும், இந்தியாவின் இளைஞர்கள் சுதந்திரம் அடைய வேண்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடாக, நாடு முழுவதும் தன்னிச்சையான போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அவரது பெயரில் ஒரு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது, ஆனால் கைது செய்வதைத் தவிர்க்க அவர் தலைமறைவாகி 1942 ஆம் ஆண்டு ஒரு தலைமறைவு இயக்கத்தைத் தொடங்கினார். அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு விற்கப்பட்டன. இதற்கிடையில், ராம் மனோகர் லோஹியாவுடன் சேர்ந்து காங்கிரஸ் கட்சியின் மாத இதழான இன்குலாப் பத்திரிகையையும் அவர் ஆசிரியராகக் கொண்டிருந்தார். 1944 ஆம் ஆண்டு இதழில், வன்முறை மற்றும் அகிம்சை பற்றிய வீண் விவாதங்களை மறந்து புரட்சியில் சேருமாறு இளைஞர்களை அவர் ஊக்குவித்தார் . ஜெயபிரகாஷ் நாராயண் மற்றும் அருணா ஆசஃப் அலி போன்ற தலைவர்கள் "காந்தியின் அரசியல் குழந்தைகள் ஆனால் கார்ல் மார்க்ஸின் சமீபத்திய மாணவர்கள்" என்று விவரிக்கப்பட்டனர். அவரைப் பிடித்ததற்காக அரசாங்கம் 5,000 ரூபாய் வெகுமதியை அறிவித்தது. அவர் நோய்வாய்ப்பட்டு டெல்லியில் உள்ள கரோல் பாக் நகரில் உள்ள டாக்டர் ஜோஷி மருத்துவமனையில் சிறிது காலம் மறைந்திருந்தார். மகாத்மா காந்தி, மறைவிலிருந்து வெளியே வந்து சரணடையுமாறு அவருக்கு கையால் எழுதப்பட்ட குறிப்பை அனுப்பினார் - அவரது பணி நிறைவேறியதாலும், வெகுமதித் தொகையை ஹரிஜன நலனுக்காகப் பயன்படுத்த முடியும் என்பதாலும் . சுதந்திரத்திற்குப் பிந்தைய மற்றும் மேயர் பதவி காங்கிரஸ் கட்சிக்குள் சோசலிச சார்புகளைக் கொண்ட ஆர்வலர்களுக்கான ஒரு குழுவான காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தார் . சோசலிசத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னேற்றத்தில் ஏமாற்றமடைந்த அவர் 1948 இல் சோசலிஸ்ட் கட்சி என்ற புதிய கட்சியில் சேர்ந்தார். இருப்பினும், அவர் எடததா நாராயணனுடன் அந்தக் கட்சியை விட்டு வெளியேறினார், மேலும் அவர்கள் ரஜனி பால்மே தத்துடன் மாஸ்கோவிற்குச் சென்றனர் . இருவரும் 1950 களின் முற்பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். தனிப்பட்ட முறையில், 1953 இல் ஆசஃப் அலி இறந்தபோது அவர் துக்கமடைந்தார். 1954 ஆம் ஆண்டில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மகளிர் பிரிவான இந்திய மகளிர் தேசிய கூட்டமைப்பை உருவாக்க அவர் உதவினார் , ஆனால் 1956 ஆம் ஆண்டில் நிகிதா குருசேவ் ஸ்டாலினை கைவிட்டதைத் தொடர்ந்து கட்சியை விட்டு வெளியேறினார் . 1958 ஆம் ஆண்டில், அவர் டெல்லியின் முதல் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். டெல்லியில் சமூக நலன் மற்றும் மேம்பாட்டிற்காக கிருஷ்ண மேனன், விம்லா கபூர், குரு ராதா கிஷன் , பிரேம்சாகர் குப்தா, ரஜனி பால்மே ஜோதி, சர்லா சர்மா மற்றும் சுபத்ரா ஜோஷி போன்ற அவரது சகாப்தத்தின் சமூக ஆர்வலர்கள் மற்றும் மதச்சார்பற்றவர்களுடன் அவர் நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்தார்.

கோவா விடுதலை இயக்கம் டிசம்பர் 1960 இல், அவர் அப்போதைய இந்திய உள்துறை அமைச்சர் பண்டிட் பந்தை புது தில்லியில் சந்தித்து , கோவாவின் விடுதலைக்காக இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திய ஒரு குழுவில் ஒருவராக இருந்தார். அந்தக் குழுவில் எக்லிட்டோ டி'சோசா, ஐரீன் ஹெரேடியா , விஸ்வநாத் லாவண்டே , லம்பேர்ட் மஸ்கரென்ஹாஸ் , ஜார்ஜ் வாஸ் மற்றும் பெர்த்தா பிராகன்சா ஆகியோர் அடங்குவர் . பதிப்பகத் துறையில் தொழில் அவரும் நாராயணனும் லிங்க் பதிப்பகத்தைத் தொடங்கி, அதே ஆண்டில் பேட்ரியாட் என்ற தினசரி செய்தித்தாளையும், லிங்க் என்ற வார இதழையும் வெளியிட்டனர். ஜவஹர்லால் நேரு , கிருஷ்ண மேனன் மற்றும் பிஜு பட்நாயக் போன்ற தலைவர்களின் ஆதரவின் காரணமாக இந்த வெளியீடுகள் மதிப்புமிக்கதாக மாறியது . பின்னர், தனது தோழர்களின் நம்பிக்கையை பேராசையால் கைப்பற்றியதால் அதிர்ச்சியடைந்த உள் அரசியல் காரணமாக, பதிப்பகத்தை விட்டு வெளியேறினார். அவசரநிலை குறித்த சந்தேகங்கள் இருந்தபோதிலும் , அவர் இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தியுடன் நெருக்கமாக இருந்தார் . அவர் "ஐடியாஸ் ஆஃப் எ நேஷன்" என்ற புத்தகத்தை எழுதினார் , இது பின்னர் இந்தியாவின் அறுபதாம் ஆண்டு சுதந்திரத்தை நினைவுகூரும் வகையில் பெங்குயின் அவர்களின் வேர்ட்ஸ் ஆஃப் ஃப்ரீடம் தொடரிலும் வெளியிடப்பட்டது இறப்பு அவர் ஜூலை 29, 1996 அன்று 87 வயதில் புது தில்லியில் இறந்தார்.





PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்



# நாக்பூரில் வெடிபொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் வெடிவிபத்து: 15 பேர் பலி



**நாக்பூர், மார்ச் 2:**

நாக்பூரில் வெடிபொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 15 பேர் பலியான நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம், கட்டோல் தெஹ்சிலில் உள்ள ரௌல்கானில் சுரங்க மற்றும் தொழில்துறை வெடிபொருள் உற்பத்தி செய்யும் எஸ்பிஎல் எனர்ஜி லிமிடெட் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இந்த தொழிற்சாலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வெடிவிபத்து நிகழ்ந்ததாக மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இதில் 15 பேர் பலியாகினர்.

எஸ்பிஎல் எனர்ஜி லிமிடெட் பிரதிநிதிகள் கூறுகையில், இந்த சம்பவம் நிறுவனத்தின் டெட்டனேட்டர் பேக்கிங் யூனிட்டில் காலை 7 மணி முதல் காலை 7.15 மணி வரை நடந்தது. வெடி விபத்து நடந்த உடனேயே காயமடைந்தவர்கள் நாக்பூரில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக போலீஸார் தெரிவித்தனர்.

# இந்தியாவின் முதல் டிஜிட்டல் சுங்கச் சாவடி: நெடுஞ்சாலை உள்கட்டமைப்பில் ஒரு மைல்கல்!

**புதுடெல்லி, மார்ச் 2:**

இந்தியாவின் முதல் டிஜிட்டல் சுங்கச் சாவடி பயன்பாட்டுக்கு வந்ததையடுத்து, அப்பகுதியில் வாகனங்கள் நில்லாமல் சாவடியைக் கடந்து செல்ல முடிகிறது.


தேசிய நெடுஞ்சாலை-48 (என்எச்-48) சூரத் காம்ரேஜ் பகுதியில் முழுக்க முழுக்க மின்னணு முறையில் இயங்கும் சுங்கச் சாவடி பயன்பாட்டுக்கு வந்தது. ரூ. 15 கோடியில் அமைக்கப்பட்டுள்ள இந்த சுங்கச் சாவடியில் வாகனங்கள் நிற்கமல் கடந்து செல்லலாம்.

அதிநவீன ஸ்கேனர்கள், ஏ.என்.பி. ஆர் கேமிராக்கள், லிடார், ரேடார், உயர் தொழிநுட்பக் கட்டுப்பாட்டு அறை ஆகியவையே இந்த சுங்கச்சாவடியின் பின்புலத்தில் இருப்பவையாகும். கண்காணிப்பு கேமிராக்களில் ஃபாஸ்டேக் உதவியுடன் சுங்கச்சாவடியைக் கடந்து செல்லும் வாகனங்களின் விவரங்கள் பதிவாகி அதனை ஊழியர்கள் கண்காணிக்கின்றனர். இதனால் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர் பயன்பாட்டுடன் இந்தச் சுங்கச் சாவடி இயங்குகிறது.

ஒரு நாளைக்கு சுமார் 25,000 வாகனங்களைக் கையாளும் இந்தச் சுங்கச் சாவடியிலிருந்து ஈட்டப்படும் வருவாய் ரூ. 60 லட்சம்.

இதனால் வாகனப் போக்குவரத்துநெருக்கடி குறைவதுடன், மாசுபாடும் குறைகிறது. மேலும், எரிபொருள் சேமிப்பு வாகன ஓட்டிகளுக்கு பலனிக்கிறது. முக்கியமாக பயண நேரம் குறைகிறது. இந்திய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பில் ஒரு புதிய சகாப்தத்துக்கு டிஜிட்டல் சுங்கச்சாவடித் திட்டம் முன்னோடியாக அமைத்துள்ளது.

# மத்திய கிழக்கில் அதிகரிக்கும் தாக்குதல்.. 400-க்கும் மேற்பட்ட இந்திய விமானங்கள் ரத்து



**புதுடெல்லி, மார்ச் 2:**

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா நேற்று அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நட்பு நாடுகள் மீதும் ஈரான் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

ஈரான் மற்றும் மத்திய கிழக்கின் சில பகுதிகளில் வான்வெளி கட்டுப்பாடுகள் காரணமாக, நேற்று (பிப்ரவரி 28ம் தேதி) உள்நாட்டு விமான நிறுவனங்களின் 410 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இன்று (மார்ச் 1-ம் தேதி) 444 விமானங்கள் ரத்து செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டு விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக விமான நிறுவனங்களுடன் DGCA நெருக்கமான ஒருங்கிணைப்பைப் பேணி வருகிறது.

விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன், பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களுடன் தங்கள் விமான நிலையை சரிபார்த்து உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சாத்தியமான திசைதிருப்பல்களை நிர்வகிக்கவும், தடையற்ற பயணிகள் வசதியை உறுதி செய்யவும் முக்கிய விமான நிலையங்கள் செயல்பாட்டு விழிப்புடன் உள்ளன. பயணிகள் உதவி, விமான ஒருங்கிணைப்பு மற்றும் முனைய கூட்ட மேலாண்மை ஆகியவை உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்றன, மூத்த அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அமைச்சகத்தின் பயணிகள் உதவி கட்டுப்பாட்டு அறை (PACR) பயணிகளின் கவலைகளை உன்னிப்பாகக் கண்காணித்து, உடனடி தீர்வுக்கு உதவி வருகிறது. பிப்ரவரி 28 அன்று, ஏர்சேவா 216 குறைகளைப் பதிவு செய்தது, அதே காலகட்டத்தில் 105 குறைகள் தீர்க்கப்பட்டன, பாதிக்கப்பட்ட பயணிகளுக்குத் தேவையான ஆதரவை உறுதி செய்தது.

பாதிக்கப்பட்ட பயணிகளை ஒழுங்காக கையாளுவதையும், சம்பந்தப்பட்ட அனைத்து பயணிகளுக்கும் சரியான நேரத்தில் உதவி செய்வதையும் உறுதிசெய்ய அனைத்து உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காக்கிநாடா பட்டாசு ஆலை வெடிவிபத்து; முதல் மந்திரி இழப்பீடு அறிவிப்பு



**காக்கிநாடா, மார்ச் 2:**

ஆந்திர பிரதேசத்தில் காக்கிநாடா மாவட்டம் வெட்லபாலெம் கிராமத்தில் பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வந்தது. இந்த ஆலையில் தொழிலாளர்கள் பலர் வேலை செய்து வந்த நிலையில், அந்த பட்டாசு ஆலையில் பலத்த சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை போராடி அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், ஆந்திராவில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார்.

இதில் பலியானவர்களின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் இழப்பீடு வழங்கப்படும் என அவர் அறிவித்து உள்ளார்.

இந்நிலையில் முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு சம்பவ பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார். அவர், மந்திரிகளையும் மற்றும் மூத்த அதிகாரிகளையும் சம்பவ பகுதிக்கு நேரில் சென்று பார்வையிடும்படி கேட்டு கொண்டார். அவர் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டார்.

இதன் பின்னர் அவர் மருத்துவமனைக்கு நேரில் சென்றார். பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களுக்கு அரசு முழு ஆதரவு அளிக்கும் என கூறினார்.

# அஜீத் பவாரின் விமானம் விபத்தில் சிக்கியதற்கு மோசமான வானிலை காரணம்: ஏஏஐபி அறிக்கை

**புதுடெல்லி, மார்ச் 2:**

மகாராஷ்டிர முன்னாள் துணை முதல்வர் அஜீத் பவார் பயணித்த சிறியரக விமானம் விபத்துக்குள்ளானதற்கு, விமான நிலையத்தில் நிலவிய மோசமான வானிலையும் ஒரு காரணமென விமான விபத்து புலனாய்வு அமைப்பு (ஏஏஐபி) தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிர மாநிலம், பாராமதியில் உள்ள விமான நிலையத்தில் கடந்த ஜனவரி 28-ஆம் தேதி காலை தரையிறங்குகையில் சிறியரக தனியார் விமானம் விழுந்து நொறுங்கியது. விமானத்தில் பயணித்த அஜீத் பவார் உள்ளிட்ட 5 பேர் பலியாகினர்.

இந்த சம்பவம் குறித்த 22 பக்க முதல்கட்ட விசாரணை அறிக்கையை ஏஏஐபி சனிக்கிழமை வெளியிட்டது. அதில், 'விபத்துக்கான காரணங்களைவெளிக்கொணரும் வகையில் அனைத்து அம்சங்கள் குறித்தும் விசாரிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இதுவரை நடந்த விசாரணை அடிப்படையில், 5,000 மீட்டர் உயரத்தில் இருக்கையில் விமானத்தை தரையிறக்கும் பணியை தொடங்க வேண்டும், ஆனால் அதற்கு மாறாக, 3,000 மீட்டர் உயரத்தில் இருக்கும்போது அதற்கான பணியில் விமானி ஈடுபட்டுள்ளார். அப்போது மோசமான வானிலை காரணமாக விமான நிலைய ஓடுபாதை சரியாகத் தெரியவில்லை. இதுவும் விபத்துக்கான காரணிகளில் ஒன்றாகும்' என கூறப்பட்டுள்ளது.

அதேபோல் விமான பாதுகாப்புக்கு எடுக்க வேண்டியஅவசியமானதடுப்பு நடவடிக்கைகள் குறித்து டிஜிசிஏ-க்கு அறிக்கையில் பரிந்துரைத்துள்ள ஏஏஐபி, விமான ஓடுபாதைகளில் விமானங்களை இயக்கும்போது, அதுதொடர்பான செயல்பாட்டு வழிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்கும்படி விமான நிறுவனங்களுக்கு டிஜிசிஏ உத்தரவிட வேண்டும், டிஜிசிஏ வகுத்த நெறிமுறைகளின்படி வானிலை நிலவரம் இருந்தால் மட்டுமே விமானம் இயக்குவதை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

# குறுகிய தூர இலக்குகளை தாக்கி அழிக்கும் வான் பாதுகாப்பு ஏவுகணை சோதனை வெற்றி



**புதுடெல்லி, மார்ச் 2:**

குறுகிய தூர இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

ராணுவத்துக்குத் தேவையான ஏவுகணைகள், துப்பாக்கிகள் உட்பட பல்வேறு ஆயுதங்களை பாதுகாப்புத் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (டிஆர்டிஓ) தயாரித்து வருகிறது. அந்த வகையில் தற்போது குறுகிய தூர எதிரி இலக்குகளை துல்லியமாகத் தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனை ஒடிசா மாநிலம் சந்திப்பூர் கடல் பகுதியில் நேற்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 'விஷார்ட்ஸ்' என்று அழைக்கப்படும் இந்த வகை ஏவுகணை உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. இந்த ஏவுகணையை மனிதர்கள் எளிதாக சுமந்து செல்ல முடியும். இதை டிஆர்டிஓ.வின் இம்ராத் ஆய்வு மையம், மற்ற டிஆர்டிஓ ஆய்வு மையங்கள், இந்திய தொழிற்துறை நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கி உள்ளது.

இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "குறுகிய தூர எதிரி இலக்கைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் 3 ஏவுகணைகள் சோதனை செய்யப்பட்டன. அவை மிகத் துல்லியமாக செயல்பட்டு இலக்கை அழித்தது.

இந்த சோதனை முழு வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம், வெவ்வேறு வேகத்தில், வெவ்வேறு உயரத்தில் பறந்து வரும் எதிரிகளின் விமானம், ஏவுகணை, ட்ரோன்கள் என எதுவாக இருந்தாலும், நமது குறுகிய தூர வான் பாதுகாப்பு ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழிக்கும்" என்று தெரிவித்துள்ளது.

இந்த சோதனையின் போது அதிவேகமாக பறந்து வந்த வான் இலக்குகளை குறுகிய தூர வான் பாதுகாப்பு ஏவுகணைகள் தாக்கி அழித்துள்ளன. இந்த சோதனை வெற்றி பெற்றதற்கு டிஆர்டிஓ விஞ்ஞானிகளுக்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்துள்ளார். விரைவில் இந்த வகை ஏவுகணைகள் ராணுவத்தில் இணைக்கப்பட உள்ளன.

# இஸ்ரேல் - ஈரான் போர்! இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயரும் அபாயம்!

**புதுடெல்லி, மார்ச் 2:**

உலகளவில் 20 முதல் 30 சதவிகித கச்சா எண்ணெய் ஏற்றுமதி ஹார்முஸ் ஜலசந்தி வழியாகத்தான் மேற்கொள்ளப்படுகிறது. ஹார்முஸ் ஜலசந்தி, உலகின் முக்கியமான கச்சா எண்ணெய் ஏற்றுமதி வழித்தடமாக அறியப்படுகிறது. தங்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்பட்டால், ஹார்முஸ் ஜலசந்தி வழித்தடத்தை மூடி விடுவோம் என்று ஈரான் நீண்டகாலமாகவே எச்சரிக்கை விடுத்து வருகிறது. இந்த நிலையில், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடி விட்டதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், ஈரான் தரப்பிலிருந்து அதிகாரப்பூர்வமான அறிவிப்பு எதுவும் பெறப்படவில்லை.

ஹார்முஸ் ஜலசந்தி வழித்தடம் மூடப்படுவதாய் இருந்தால், இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை அதிகரிக்கும் அபாயமும் உள்ளது. ஏனெனில், இந்தியா தனது 80 முதல் 90 சதவிகித கச்சா எண்ணெய்யை இறக்குமதிதான் செய்கிறது.

பெரும்பாலும் சௌதி அரேபியா, இராக், ஐக்கிய அரபு அமீரகம், குவைத், கத்தார் உள்ளிட்ட நாடுகளிருந்து ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே இறக்குமதி செய்கிறது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் பட்சத்தில், கச்சா எண்ணெய் விலை உடனடியாக அதிகரிக்கும்.

கச்சா எண்ணெய்யில் உயர்வு ஏற்பட்டால், இந்தியாவின் இறக்குமதி செலவுகள் தானாகவே அதிகரிக்கும். இதனால், பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விலைகளில் உயர்வு ஏற்படும் அழுத்தம் உண்டாகும். இதனால், உள்நாட்டு எரிபொருள் விலை அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

# நாட்டிலேயே முதல் முறையாக தன்பாலின ஈர்ப்பாளர் மேனகா குருசாமி எம்.பி.யாகிறார்

**புதுடெல்லி, மார்ச் 2:**

மாநிலங்களவையில் விரைவில் காலியாக உள்ள 37 இடங்களுக்கு மார்ச் 16-ம் தேதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி, மேற்கு வங்கத்தில் 5 இடங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி சார்பில், உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞரும் தன்பாலின ஈர்ப்பாளருமான (எல்ஜிபிடிக்யூ) மேனகா குருசாமி, சட்டப்பேரவை உறுப்பினர் பாபுல் சுப்ரியோ, டோலிவுட் நடிகை கோயல் மல்லிக் மற்றும் சமீபத்தில் ஓய்வு பெற்ற மேற்கு வங்க காவல் துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) ராஜீவ் குமார் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் மேனகா குருசாமி வெற்றி பெற்றால் நாட்டின் முதல் எல்ஜிபிடிக்யூ நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வரலாறு படைப்பார்.

மேனகா குருசாமி ஒரு அரசியலமைப்புச் சட்ட வல்லுநர் மற்றும் இந்திய தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர். அவர் 1997-ம் ஆண்டு முன்னாள் அட்டர்னி ஜெனரல் அசோக் தேசாயின் கீழ் தனது சட்டப் பணியைத் தொடங்கினார். மேனகா தனது ஆரம்பக் காலங்களில் வழக்குகள் மற்றும் அரசியலமைப்பு விவகாரங்களில் முக்கியமாகப் பணியாற்றினார்.

பின்னர் வெளிநாடுகளில் உயர்கல்வியைத் தொடர்ந்த அவர், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பிசிஎல் பட்டமும், ஹார்வர்டு சட்டப் பள்ளியில் முதுகலை சட்டப் பட்டமும் பெற்றார். நியூயார்க்கில் உள்ள 'டேவிஸ் போல்க் & வார்டுவெல்' நிறுவனத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 2015-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அமெரிக்காவின் புகழ்பெற்ற யேல், கொலம்பியா மற்றும் நியூயார்க் பல்கலைக்கழகங்களில் கவுரவப் பேராசிரியராக மேனகா பணியாற்றியுள்ளார். மேலும், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி நிதியம் மற்றும் சிறுவர் நிதியமான யுனிசெஃப் ஆகியவற்றுக்கு ஆலோசகராகவும் செயல்பட்டுள்ளார். இந்தியாவில், பிரிவு 377-ஐ (தன்பாலின சேர்க்கையை குற்றமாகக் கருதும் சட்டம்) எதிர்த்து வாதிட்ட சட்டக் குழுவில் மேனகா முக்கியப் பங்கு வகித்தார். அதிகாரத்துவ சீர்திருத்தங்கள், அகஸ்டா வெஸ்ட்லேண்ட் ஊழல் வழக்கு, சல்வா ஜூடும் வழக்கு மற்றும் கல்வி உரிமைச் சட்டம் தொடர்பான பல முக்கிய வழக்குகளிலும் அவர் வாதாடி உள்ளார்.

# சத்தீஸ்கர் சட்டப்பேரவையை பார்வையிட்ட 20 முன்னாள் மாவோயிஸ்ட்கள்

**ராய்ப்பூர், மார்ச் 2:**

மார்ச் 31-ம் தேதிக்குள் நாடு முழுவதும் மாவோயிஸ்ட் மற்றும் நக்சல் தீவிரவாதத்தை ஒழிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதன்படி, மாவோயிஸ்ட் அமைப்புகளில் இருந்து ஜனநாயகப் பாதைக்கு திரும்புவோருக்கு மறுவாழ்வு திட்டங்களை அந்தந்த மாநில அரசுகள் அறிவித்துள்ளன. இதையடுத்து, இதுவரை நூற்றுக்கணக்கானவர்கள் சரணடைந்துள்ளனர். இந்நிலையில், சத்தீஸ்கர் அரசின் மறுவாழ்வு முயற்சியின் ஒரு பகுதியாக, சுமார் 120 சரணடைந்த மாவோயிஸ்ட்கள் ராய்ப்பூரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சட்டப்பேரவையைப் பார்வையிட வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் 59 வயதான முன்னாள் மத்திய குழு உறுப்பினர் தக்கலப்பள்ளி வாசுதேவ ராவும் (ஆஷண்ணா (எ) ரூபேஷ்) ஒருவர். இவர் மாவோயிஸ்ட்களின் 'குண்டு தயாரிப்பாளர்' என்று அறியப்பட்டவர். மேலும், 2003-ம் ஆண்டு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மீதான கொலை முயற்சி உள்ளிட்ட முக்கியத் தாக்குதல்களில் இவருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சரணடைந்தவர்களை 'ஜெய் ஜோஹர்' என பாரம்பரிய முறைப்படி முதல்வர் விஷ்ணு தியோ சாய் வரவேற்றார்.

# ரேஷனில் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை நிறுத்த மத்திய அரசு முடிவு

**புதுடெல்லி, மார்ச் 2:**

ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க, இரும்பு சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12 ஆகிய நுண்ணூட்ட சத்துக்களுடன் செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கும் திட்டத்தை பிரதமர் மோடி கடந்த 2021-ம் ஆண்டு அறிவித்தார். விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசு கொள்முதல் செய்யும் அரிசிகள் உணவு தானிய சேமிப்பு கிடங்கில் 2 முதல் 3 ஆண்டுகள் வரை சேமித்து வைக்கப்படுகின்றன. நாடு முழுவதும் உள்ள மத்திய அரசின் உணவு கிடங்குகளில் 674 லட்சம் டன்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 372 லட்சம் டன்கள் ஒவ்வொரு ஆண்டும் இலவச அரிசி திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இந்நிலையில், செறிவூட்டப்பட்ட அரிசியை எவ்வளவு காலம் சேமித்து வைக்க முடியும் என்ற ஆய்வில் காரக்பூர் ஐஐடி ஈடுபட்டது. நமது நாட்டின் தட்ப வெப்ப சூழ்நிலையில், செறிவூட்டப்பட்ட அரிசியை நீண்ட காலம் சேமித்து வைத்தால் அது உடைந்து விடுகிறது. மேலும், அவற்றில் உள்ள நுண்ணூட்ட சத்துக்களின் அளவுகளும் குறைவது ஆய்வில் தெரிய வந்தது. இதையடுத்து இப்பிரச்சினைகளுக்கு நவீன தொழில்நுட்பம் மூலம் தீர்வு காணும் வரை செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

# கர்நாடக கிராமத்தில் அரசு சார்பில் சலூன்

**பெங்களூரு, மார்ச் 2:**

கர்நாடக மாநிலம் கதக் மாவட்டம் சிங்கத்தலூர் கிராமத்தில் உள்ள முடி வெட்டும் கடையில் பட்டியலினத்தவருக்கு முடி வெட்ட கூடாது என ஆதிக்க சாதியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து கதக் மாவட்ட சமூக நலத்துறை அதிகாரிகள், தங்களது துறையின் சார்பில் முடி வெட்டும் கடை திறக்க திட்டமிட்டனர். சமூக நலத்துறை அமைச்சர் எச்.சி.மஹாதேவப்பாவை சந்தித்து அனுமதி கேட்டனர்.

அவர் கடந்த 26-ம் தேதி அனுமதி அளித்ததை தொடர்ந்து, சிங்கதத்தலூர் கிராமத்தில் முதல் முறையாக, அரசே முடிவெட்டும் கடையை நேற்று முன்தினம் திறந்தது. இதனால் பட்டியலின மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.




## தாழையூத்து பெண் ஊராட்சித் தலைவரை கொல்ல முயன்ற வழக்கு: 6 பேருக்கு இரட்டை ஆயுள் சிறை உறுதி

மதுரை, மார்ச்.02: திருநெல்வேலி மாவட்டம் தாழையூத்து பெண் ஊராட்சித் தலைவரை அரிவாளால் வெட்டிக் கொலை முயற்சியில் ஈடுபட்டது தொடர்பான வழக்கில், ஊராட்சி உறுப்பினர் உள்ளிட்ட 6 பேரின் இரட்டை ஆயுள் சிறைத் தண்டனையை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உறுதி செய்து உத்தரவிட்டது.

தாழையூத்து ஊராட்சித் தலைவராக 2006 முதல் 2011 வரை இருந்தவர் கிருஷ்ணவேணி. பட்டியலினத்தைச் சேர்ந்த இவரை ஊராட்சி உறுப்பினர் சுப்பு என்ற சுப்பிரமணியன் சாதிரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார். மேலும், கழிப்பறை கட்டும் விவகாரத்தில் இவர்களிடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், 2011 ஜூன் 13-ம் தேதி கிருஷ்ணவேணியை ஒரு கும்பல் அரிவாளால் வெட்டித் தாக்கிவிட்டு தப்பியது. இதில் கிருஷ்ணவேணியின் கை விரல்கள் துண்டான நிலையில், சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உயிர் பிழைத்தார்.

இது தொடர்பாக 9 பேரை போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கை நெல்லை வன்கொடுமை வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் விசாரித்தது. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே ஒருவர் உயிரிழந்தார். விசாரணை முடிவில், சுப்பு என்ற சுப்பிரமணியன், சுல்தான் மைதீன், கார்த்திக், ஜேக்கப், பிரவீன்ராஜ், விஜயராமமூர்த்தி ஆகிய 6 பேருக்கு இரட்டை ஆயுள் சிறைத் தண்டனையும், ரூ.7.60 லட்சம் அபராதமும் விதித்து 2024 அக். 8-ம் தேதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வழக்கிலிருந்து 2 பேர் விடுவிக்கப்பட்டனர்.

இதையடுத்து, தண்டனையை ரத்து செய்யக் கோரி 6 பேரும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு செய்தனர். இந்த மனு நீதிபதிகள் ஜி.கே.இளந்திரையன், ஆர்.பூர்ணிமா அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. கிருஷ்ணவேணி தரப்பில் வழக்கறிஞர் திருமுருகன் வாதிடும்போது, “மனுதாரர்கள் கொடூர தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட கிருஷ்ணவேணி தற்போது 75 சதவீத மாற்றுத் திறனாளியாக உள்ளார்” என்றார்.

இதையடுத்து, மனுதாரர்கள் 6 பேருக்கும் விசாரணை நீதிமன்றம் வழங்கிய இரட்டை ஆயுள் சிறைத் தண்டனையை உறுதி செய்தும், மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## பழநி அருகே புஷ்பத்தூர் காகித ஆலையில் விஷ வாயு தாக்கி 2 தொழிலாளர்கள் உயிரிழப்பு

பழநி, மார்ச்.02: திண்டுக்கல் மாவட்டம் பழநி அருகே புஷ்பத்தூரில் உள்ள தனியார் காகித ஆலையில் காகிதம் அரைக்கும் இயந்திரத்தை சுத்தம் செய்யும் போது விஷ வாயு தாக்கியதில் வடமாநிலத் தொழிலாளர்கள் 2 பேர் உயிரிழந்தனர்.

பழநி அருகேயுள்ள புஷ்பத்தூரில், திருப்பூர் மாவட்ட எல்லையில் தனியார் காகித ஆலை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், நேற்று காலை பழைய காகிதங்களை அரைக்கும் இயந்திரத்தின் (பாய்லர்) உட்பகுதியில் இறங்கி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த நூர் அலாம் (32), ராம் புரூஸ் மஞ்சூரி (35) ஆகியோர் விஷ வாயு தாக்கியதில் மயக்கமடைந்தனர்.

அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டு, திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், இருவரும் வழியிலேயே உயிரிழந்தனர். இதையடுத்து, இருவரது உடல்களையும் பிரேதப் பரிசோதனைக்காக உடுமலைப்பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். விஷ வாயு தாக்கி தொழிலாளர்கள் உயிரிழந்தது தொடர்பாக, பழநி சாமிநாதபுரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

## தியேட்டரில் சிறுமி பாலியல் வன்கொடுமை- திருப்பூர் வாலிபருக்கு 30 ஆண்டு சிறை தண்டனை

மேலசொக்கநாதபுரம், மார்ச்.02: திருப்பூரை சேர்ந்தவர் முகமதுரியாஸ் (வயது27). இவர் இடுக்கி மாவட்டம் மூணாறு அருகில் உள்ள மறையூரை சேர்ந்த 16 வயது சிறுமியுடன் இன்ஸ்டாகிராம் மூலம் பழகி வந்தார்.

இவர்கள் நட்பு அதிகரித்த நிலையில் தனது குடும்ப சூழ்நிலையை சிறுமி தெரிவித்து ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்யுமாறு கூறி உள்ளார். அப்போது திருப்பூருக்கு வந்தால் வேலை வாங்கி தருவதாக அவர் தெரிவித்தார்.

பின்னர் சிறுமியை வரவழைத்து கூட்டம் அதிகம் இல்லாத தியேட்டருக்கு அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். பின்னர் தன்னுடனே அவர் தங்க வைத்துள்ளார். இதனிடையே சிறுமி மாயமானதை தொடர்ந்து அவரது பெற்றோர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். போலீசார் சிறுமியின் செல்போன் எண்ணை வைத்து விசாரணை நடத்தியதில் திருப்பூரில் பதுங்கி இருந்தது தெரிய வரவே அவரை மீட்டு விசாரித்தனர். அப்போது தன்னை வேலைக்கு வரச்சொல்லி முகமது ரியாஸ் பாலியல் வன்கொடுமை செய்ததாக அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கேரள போலீசார் முகமது ரியாசை கைது செய்தனர். இந்த வழக்கு இடுக்கி போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கில் 35 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு 41 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

விசாரணை முடிந்த நிலையில் முகமது ரியாசுக்கு 30 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தனர். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு சட்ட சேவை வாரியம் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.

# பூந்தமல்லி - வடபழனி இடையே சென்னை மெட்ரோ ரயில் சேவை தொடங்க அனுமதி




சென்னை, மார்ச்.02: சென்னையில் 2-ம் கட்டம் மெட்ரோ ரயில் திட்டம் 116.1 கி.மீ. தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப் படுகின்றன.

இதில், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரை 26.1 கி.மீ. தொலைவிலான வழித்தடத்தில் பூந்தமல்லி- போரூர், போரூர் - வடபழனி வரை பணிகள் நிறைவடைந்துள்ளன.

அதைத் தொடர்ந்து, பூந்தமல்லி - போரூர் வரையிலான தடத்தில் மெட்ரோ ரயில் மற்றும் வழித்தடத்துக்கு பாதுகாப்பு சான்றிதழ் பெறுவதற்கான சோதனையை இந்திய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பின் குழுவினர் கடந்த ஆண்டு ஆக.16 முதல் ஒரு வாரத்துக்கு மேல் நடத்தினர்.

அதைத் தொடர்ந்து, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி தலைமையிலான குழுவினர், பூந்தமல்லி - வடபழனி இடையே அதிவேக சோதனை ஓட்டத்தை கடந்த 24-ம் தேதி மேற்கொண்டனர். அப்போது, மெட்ரோ ரயிலை மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் இயக்கி சோதித்தனர். மேலும், சிக்னல் அமைப்பு, பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்நிலையில், பூந்தமல்லி முதல் போரூர் வரை முழுமையாகவும். போரூர் முதல் வடபழனி வரை குறைவாகவும் மெட்ரோ ரயில் சேவை இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பூந்தமல்லி மெட்ரோ நிலையம் போரூர் சந்திப்பு வரையிலான 14.6 கி.மீ நீளமுள்ள வழித்தடம் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் திறக்க மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதில் 10 நிலையங்கள் உள்ளன.

ஆரம்பத்தில் பூந்தமல்லி புறவழிச் சாலை மற்றும் போரூர் சந்திப்பு இடையே 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

போரூர் சந்திப்பு முதல் வடபழனி வரை, ஒரு நேரத்தில் ஒவ்வொரு திசையிலும் ஒரு ரயில் மட்டுமே இயக்கப்படும். அதன் வேகம் மணிக்கு 25 கி.மீ-க்கும் குறைவாகவே இருக்கும்.

20 நிமிடங்கள் இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். ஒரு மாதத்துக்குப் பிறகு, ரயில்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்” என்றனர்.

# திருவெண்காட்டில் இந்திர திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்!



திருவெண்காடு, மார்ச்.02: திருவெண்காட்டில் உள்ள பிரம்ம வித்யாம்பிகை சமேத சுவேதாரண்யேஸ்வரர் கோயிலில் இந்திர திருவிழா சனிக்கிழமை இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது.

மயிலாடுதுறை மாவட்டம், திருவெண்காட்டில் பிரசித்தி பெற்ற பிரம்ம வித்யாம்பிகை சமேத சுவேதாரண்யேஸ்வரர் கோயில் உள்ளது.

இக்கோயிலில் சிவனின் 5 முகங்களில் ஒன்றான அகோர முகத்தில் அகோர மூர்த்தியாக காட்சியளித்து வருகிறார்.

மேலும் நவகிரகங்களில் ஒன்றான புதனின் பரிகார ஸ்தலமாகவும் விளங்குகிறது. உலகிலேயே மூன்று குளங்களைக் கொண்ட ஒரே கோயிலாக இது விளங்குகிறது. பல்வேறு சிறப்புகளை கொண்ட இக்கோயிலின் இந்திர திருவிழா சனிக்கிழமை இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதனையொட்டி கோயிலின் கொடிமரம், விநாயகர் மற்றும் நந்தி ஆகியவற்றுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன. பின்னர் வேத மந்திரங்கள் முழங்கிட அர்ச்சகர் ராஜப்பா சிவாச்சாரியார் நந்தி உருவம் பொறித்த கொடியை ஏற்றி வைத்து உற்சவத்தை தொடக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பஞ்சமூர்த்திகள் வீதி உலா காட்சி நடந்தது. இதில் அறங்காவலர் குழு தலைவர் ரவி, நிர்வாக அதிகாரி முருகன் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# அரசுப் பள்ளிகளில் இன்று முதல் மாணவர் சேர்க்கை




சென்னை, மார்ச்.02: தமிழக அரசுப் பள்ளிகளில் வரும் கல்வியாண்டுக்கான (2025-2026) மாணவர் சேர்க்கை திங்கள்கிழமை (மார்ச் 2) முதல் நடைபெறவுள்ளது.

தமிழக பள்ளிக் கல்வித் துறையின்கீழ் 37,554 அரசுப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 52 லட்சம் மாணவ, மாணவிகள் பயில்கின்றனர். அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கோடை விடுமுறைக்கு பின்பு பள்ளிகள் ஜூன் மாதம் திறக்கப்படும் நாளில் தொடங்கப்படுவது வழக்கமாக இருந்தது.

மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு 2024-ஆம் ஆண்டுமுதல் மாணவர் சேர்க்கை முன்கூட்டியே மார்ச் மாதம் தொடங்கப்பட்டு வருகிறது. அதற்கு பரவலாக பெற்றோர்களிடம் வரவேற்பு கிடைத்தது. அதைத் தொடர்ந்து வரும் கல்வியாண்டுக்கான (2026-2027) மாணவர் சேர்க்கை திங்கள்கிழமை (மார்ச் 2) தொடங்கவுள்ளது. அதற்கேற்ப பள்ளிகளில் உரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வியை நிறைவு செய்யும் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அருகே உள்ள அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அதேபோல், தமிழக அரசின் நலத்திட்டங்கள், உதவித்தொகைகள் குறித்த விழிப்புணர்வை பெற்றோருக்கு ஏற்படுத்தி மாணவர் சேர்க்கையை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கை விகிதம் கணிசமான அளவில் உயர வேண்டும். மேலும், மாணவர் சேர்க்கைக்கான விழிப்புணர்வு செயல்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டுமென பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது.

# அவிநாசி அருகே குட்டை நீரில் மூழ்கி 2 சிறுவர்கள் பலி!

அவிநாசி, மார்ச்.02: அவிநாசி அருகே அனந்தகிரி குட்டை நீரில் மூழ்கி இரு சிறுவர்கள் ஞாயிற்றுக்கிழமை பலியாகினர்.

திருப்பூர் மாவட்டம் அவினாசி அவிநாசி அருகே அனந்தகிரி அமுதன் கார்டன் பகுதியைச் சேர்ந்த தரணிஷ் (11), கடலூர் அரசு பள்ளியில் 7 ஆம் வகுப்பு பயின்று வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த திருமுருகன் மகன் ஹரிஹரன் (8), அரசு பள்ளியில் 2 ஆம் வகுப்பு படித்து வந்தார்.

இவர்கள் இருவரும் சனிக்கிழமை பள்ளி விடுமுறை என்பதால் விளையாடச் சென்றுள்ளனர். இரவு நீண்ட நேரம் ஆகியும் இருவரும் வீடு திரும்பாததால், பெற்றோர்கள் அவிநாசி காவல் நிலையத்தில் , சிறுவர்களை காணவில்லை என புகார் அளித்தனர்.

இந்த நிலையில், அவிநாசி அருகே நம்பியம்பாளையம் அனந்தகிரி குட்டையில், இரு சிறுவர்களின் உடல்களும் மிதப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்திற்கு சென்ற போலீஸார், விசாரணை மேற்கொண்டதில் உயிரிழந்தது தரணிஷ், ஹரிஹரன் என்பது தெரியவந்தது. இதையடுத்து, போலீஸார் இரு சிறுவர்களின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அவிநாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஒரே பகுதியில் இரு சிறுவர்கள் பலியான சம்பவம் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து அவிநாசி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# கோடைக்காலம் தொடங்கியது! வனப்பகுதியில் காட்டுத் தீ ஏற்பட வாய்ப்பு!

அம்பாசமுத்திரம், மார்ச்.02: தமிழகத்தில் கோடை வெயில் சுட்டெரிக்கும் எனவும் மலையேற்றத்திற்கு தமிழக வனத்துறை தடை செய்ய வேண்டும் எனவும் தனியார் வானிலை ஆய்வாளர் ராஜா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நிகழாண்டு கோடையின் தாக்கம் அதிகமாக இருக்கும். பரவலாக வனப்பகுதியில் காட்டுத் தீ ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மலைப்பகுதிகளில் மலையேற்றத்திற்கு தமிழக அரசு மற்றும் வனத்துறை தடைவிதிக்க வேண்டும் என்று தனியார் கால நிலை ஆய்வாளர் தென்காசி ராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழகத்தில் மார்ச் 1 முதல் மே 31 வரையிலான கால கட்டமே கோடைக் காலமாகும். இந்நிலையில் நிகழாண்டு கோடைக் காலம் இன்று முதல் தொடங்குகிறது. நிகழாண்டு வெப்பநிலையை பொறுத்தவரை கடந்தாண்டை விட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் மாதத்தில் கன்னியாகுமரி, தென்காசி, தேனி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, வேலூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் வெப்பநிலை இயல்பை விட அதிகமாக இருக்கும்.

மேலும் கடலூர், நாகப்பட்டினம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 4 மாவட்டங்களில் மார்ச் மாதத்தில் இயல்பான அளவிலேயே வெப்பநிலை பதிவாகும். குறிப்பாக உதகை, கொடைக்கானலுக்கு அடுத்தப்படியாக தென் கடலோரப் பகுதிகளில் வெப்பநிலை குறைவாகவே பதிவாகும். கிழக்குக் கடல் காற்று தமிழகப் பகுதிக்குள் நுழைவதால் கோடியக்கரை, நாகப்பட்டினம், ராமேஸ்வரம், தூத்துக்குடி, திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம், உவரி ஆகிய கடலோரப் பகுதிகளில் மிதமான வெப்பமே காணப்படும்.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தமிழகம் முழுவதுமே இயல்பைவிட மிக அதிகமாக வெப்பநிலை அதிகரிக்கும். கோடைக்காலம் மே மாதத்துடன் நிறைவடைந்தாலும் ஆகஸ்ட் மாதம் வரை வெய்யில் தாக்கம் அதிகமாக இருக்கும். வனத்துறைக்கு சவாலான பணி:

நிகழாண்டு வெய்யில் சுட்டெரிக்கும் என்பதால் காட்டுத் தீ ஏற்பட வாய்ப்புள்ளது. கோடைக் காலங்களில் ஏற்படும் வறட்சி மற்றும் காட்டுத் தீ போன்ற சவால்களை எதிர்கொள்ள தமிழக வனத்துறை பல்வேறு தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் நல்லது.

மேலும் தீ தடுப்புக் கோடுகள் உருவாக்குதல், வனப்பணியாளர்கள் அடங்கிய குழுக்களை உருவாக்குதல், வனத்தை ஒட்டியுள்ள கிராம மக்களிடம் காட்டுத் தீ குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்டவற்றை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

மலையேற்றத்திற்கு தடை விதிக்க வேண்டும்: தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் வெப்பநிலை மிக அதிகமாக இருக்கும் என்பதால் சுற்றுலாப் பயணிகள் மலையேற்றத்திற்கு (Trekking) தடை செய்ய வேண்டும். கோடைக் காலங்களில் மலையேற்றத்திற்கு அனுமதி வழங்காமல் இருப்பது நல்லது.

கோடைமழை எப்படி? கோடைக்காலத்தில் தமிழகம் சராசரியாக 125 மி.மீ. மழையை பெறும். அதிலும் குறிப்பாக தமிழக மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் தான் கோடைக் காலத்தில் அதிகமழையை பெறும் மாவட்டங்களாக உள்ளன.

அதிகமழையை பெறும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள்: தமிழகத்தில் வெப்பநிலை அதிகரித்தாலும் இரவு நேரங்களில் கோடைமழையும் குறிப்பிடத்தக்க அளவு பதிவாக வாய்ப்புள்ளது. நிகழாண்டு கோடைமழையை பொருத்தவரை ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேனி, திண்டுக்கல், கோயம்பத்தூர், தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் நல்ல மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக மே மாதங்களில் தமிழக மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இயல்பைவிட அதிக மழை பெய்யும். கோடைமழை என்பதால் தரைக்காற்று பலமாக வீசும். மாலை, இரவு நேரங்களில் இடி மின்னலுடன் வலுவான மழை பெய்யும்.

இந்தாண்டு கோடைகாலத்தில் திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, சேலம், கிருஷ்ணகிரி, திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும் நல்ல மழைக்கு வாய்ப்புள்ளது. தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் மானாவாரி பயிர் செய்யும் பகுதிகளிலும் நல்ல மழை பெய்யும்.

கோடைமழை எவ்வளவு ?


தமிழகத்தில் கோடைக்காலங்களில் மாநிலத்திலேயே கன்னியாகுமரி மாவட்டம் அதிகமான மழையை பெறுகிறது. கோடைக்காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம் சராசரியாக 272 மி.மீ. மழையும், நீலகிரி மாவட்டம் சராசரியாக 213 மி.மீ. மழையும், தென்காசி மாவட்டம் சராசரியாக 180 மி.மீ. மழையும் தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் சராசரியாக 171 மி.மீ. மழையும், தருமபுரி மாவட்டம் 170 மி.மீ. மழையும் பெறுகின்றன.





கும்பகோணம் பிரம்மன் தெருவில் உள்ள வரதராஜப் பெருமாள் கோவிலில் திவ்ய தரிசனம்.

# கட்சி மாறியதும் காட்சிகள் மாறியது- அ.தி.மு.க. சுவடே இல்லாமல் போன ஓ.பி.எஸ். வீடு





**பெரியகுளம், மார்ச்.02:** தேனி மாவட்டம் பெரியகுளத்தை சேர்ந்த ஓ.பன்னீர்செல்வம் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இருந்தபோது 2 முறை முதலமைச்சராக அவரால் அமர்த்தப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் மீண்டும் முதலமைச்சரானார்.

பின்னர் அ.தி.மு.க.வில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட அவர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தன்னை தி.மு.க.வில் இணைத்துக்கொண்டார்.

கடந்த சில நாட்களாகவே ஓ.பி.எஸ். நடவடிக்கையில் அதிருப்தியடைந்த அ.தி.மு.க.வினர் அவர் தி.மு.க.வில் இணைந்ததை கொண்டாடினர். ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த தொகுதியான போடியில் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

தி.மு.க.வில் இணைந்த பின்னர் கடந்த 50 வருடங்களாக அவரது காரில் இருந்த ஜெயலலிதா படம் அகற்றப்பட்டு தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படம் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெரியகுளத்தில் உள்ள அவரது இல்லத்தில் அ.தி.மு.க. வண்ணமான கருப்பு, வெள்ளை, சிவப்பு வரையப்பட்டிருந்தது. ஓ.பி.எஸ். தி.மு.க.வில் இணைந்ததை தொடர்ந்து காட்சிகள் மாறியுள்ளன. அந்த வண்ணம் தி.மு.க. கட்சி கொடியான கருப்பு, சிவப்பு வண்ணமாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் அவரது நுழைவு வாயில் கிரில் கேட்டில் இரட்டை இலை சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த கேட்டில் இருந்த இரட்டை இலை சின்னத்தை அறுத்து எடுக்கப்பட்டது. மேலும் அங்கு உதயசூரியன் சின்னம் பொருத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. ஜெயலலிதா உள்ளிட்ட அ.தி.மு.க. தலைவர்கள் படங்கள் அகற்றப்பட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படம் வைக்கப்பட உள்ளது.

தி.மு.க.வில் அவர் இணைந்ததை தொடர்ந்து அ.தி.மு.க.வின் சுவடே இல்லாமல் ஓ.பி.எஸ். இல்லம் மாறியுள்ளது. அவர் தி.மு.க.வில் இணைந்தது கடைகோடி அ.தி.மு.க. தொண்டர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் அவரது வீட்டில் இருந்த இரட்டை இலை சின்னத்தை எந்திரம் மூலம் அகற்றப்படுவதை பார்த்த தொண்டர்கள் கண்ணீர் வடித்தனர். தன்னை 3 முறை முதலமைச்சராக்கிய அ.தி.மு.க.விற்கு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் துரோகம் செய்து விட்டதாக தொண்டர்கள் தெரிவித்தனர். ஜெயலலிதாவின் ஆன்மா அவரை மன்னிக்காது என வேதனையுடன் புலம்பினர்.

# வரும் தேர்தலில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி அமைக்க வேண்டி மடப்புரம் காளி கோவிலில் முன்னாள் எம்எல்ஏ நாகராஜன் சிறப்பு வழிபாடு






**மானாமதுரை, மார்ச்.02:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே பிரசித்தி பெற்ற அடைக்கலம் காத்த ஐயனார் அருள்மிகு பத்திரகாளி அம்மன் மடப்புரம் காளி கோவிலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டும் வரும் சட்ட மன்ற தேர்தலில் அதிமுக பொதுச் செயலாளர் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதல்வர் ஆக வேண்டி மானாமதுரை முன்னாள் எம்எல்ஏ நாகராஜன் சார்பில் அதிமுக தொண்டர்கள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது மக்களுக்கு அன்னதானம் நடைபெற்றது. மானாமதுரை முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.நாகராஜன் தலைமையில் மடப்புரம் காளி சன்னதியில் பூஜைகள் நடத்தி சிறப்பு வழிபாடு நடந்தது. அதைத்தொடர்ந்து கோவிலில் நடந்த அன்னதானத்தை நாகராஜன் தொடங்கி வைத்தார். இதில் ஏராளமானோர் பங்கேற்றனர். மானாமதுரை முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மாரிமுத்து, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் மணலூர் மணிமாறன் ஒன்றிய செயலாளர்கள் சோடை

# பிடாரிசேரி கைலாசநாதர் கோவிலில் 108 மூலிகைகள் அபிஷேக திருவிழா











**மானாமதுரை, மார்ச்.02:** ராமநாதபுரம் மாவட்டம் பரார்த்திபனூர் அருகே உள்ள பிடாரிசேரி கிராமத்தில் உள்ள ஶ்ரீ கைலாசநாதர் கோவிலில் மாசி பிரதோஷ வழிபாடு 108 மூலிகைகள் அபிஷேகம் விழா நடைபெற்றது. மதுரை ஆலவாயர் அருட் பணிமன்றம் சார்பில் நடைபெறும 158 ஆன்மிக ஆலய பயணத்தில் அடியார் பெருமக்கள் பிடாரி சேரி கைலாசநாதர் கோவிலுக்கு வருகை தந்து இப்பெருந்திருவிழாவில் கோவில் நிர்வாகம்அடியார் பெருமக்கள் பிடாரிசேரி ஊரின் சுற்றுப்புற கிராம பொதுமக்கள், சிவனடியார்கள் ஆலவாயர் அருட்பணி மன்றத்தின் அடியார் பெருமக்கள் ஒருங்கிணைந்து வழிகாட்டுதலோடும் சிறப்பான ஏற்பாட்டின்படி காலை பசுக்கள் வழிபாடு கோபூஜையுடன் தொடங்கியது.

தொடர்ந்து பக்தர்கள் தங்கள் கைகளில் கலந்த 108 மூலிகை கலசத்துடன் ஊர் வலம் வந்து தொடர்ந்து திருமுறை பாராயணம் விண்ணப்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பொன் குழந்தைகள் பாதபூசையும் சிறப்பு மூலிகைகள் அபிஷேகம் நடைபெற்றது. விரைவில் திருப்பணி நடந்து குடமுழுக்கு நடைபெற வேண்டி பிரத்தனையுடன் கூடிய கூட்டு வழிபாடு தொடர்ச்சியாக பிரதோச வழிபாடு நடைபெற்றது.

பக்தர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது.

பார்த்திபனூர் வழியாக திருவில்லிபுத்தூர் செல்லும் சாலையில் பிடாரிசேரி கைலாசநாதர் திருக்கோவில் உள்ளது.




# முஸ்லிம் லீக், மமக. வுக்கு 2 இடங்கள்: திமுக கூட்டணியில் ஒப்பந்தம்

**சென்னை, மார்ச்.02:** திமுக கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் மனிதநேய மக்கள் கட்சிக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ளது. இதையடுத்து மாநாடுகள், தேர்தல் அறிக்கை தயாரிப்பு, விருப்பமனு விநியோகம் என தேர்தல் பணிகளை ஆளுங்கட்சியான திமுக முடுக்கிவிட்டுள்ளது.

மறுபுறம் கூட்டணிக் கட்சிகளுடனான தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தையும் கடந்த பிப்ரவரி 22-ம் தேதி தொடங்கி திமுக நடத்தி வருகிறது. இதுவரை காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட்கள், கொமதேக, மமக, ஐயூஎம்எல் உட்பட கட்சிகளுடன் முதல்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் திமுக கூட்டணியில் முஸ்லிம் லீக் மற்றும் மனிதநேய மக்கள் கட்சிக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான தொகுதி உடன்பாடு ஒப்பந்தம் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சென்னை அறிவாலயத்தில் நேற்றுமாலை கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தில் மமக தலைவர் ஜவாஹிருல்லா, ஐயூஎம்எல் தலைவர் காதர் மொய்தீன் கையெழுத்திட்டனர். முஸ்லிம் லீக் 2 தொகுதிகளிலும் அவர்கள் ஏணி சின்னத்திலும், மமக 2 தொகுதிகளில் திமுக சின்னத்திலும் போட்டியிட உள்ளது. மேலும், இவ்விரு கட்சிகளுக்கு 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளே மீண்டும் வழங்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விருப்ப மனு அவகாசம் நீட்டிப்பு: இதற்கிடையே சட்டப்பேரவைத் தேர்தலுக்கான விருப்ப மனுக்கள் கடந்த பிப்ரவரி 20-ம் தேதி தொடங்கிவிநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 5 ஆயிரத்துக்கும் மேலான மனுக்கள் விற்பனையாகியுள்ளன. இதற்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் மாரச் 2-ம் தேதியுடன் முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது விருப்ப மனுக்கான அவகாசம் மார்ச் 6-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக திமுக அறிவித்துள்ளது.

# "தனித்துப் போட்டியிட காங்கிரஸுக்கு தைரியம் இல்லை" – குஷ்பு குற்றச்சாட்டு

**சென்னை, மார்ச்.02:** தனித்து போட்டியிடும் தைரியம் காங்கிரஸ் கட்சிக்கு இல்லை. அதனால்தான் திமுகவிடமும், விஜய்யிடமும் காங்கிரஸ் பேரம் பேசுவதாக நடிகை குஷ்பு குற்றம்சாட்டியுள்ளார்.

பாஜக மாநில துணை தலைவர் நடிகை குஷ்பு சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: தேர்தலுக்கு பாஜக தயாராக உள்ளது. மதுரையில், பிரதமர் மோடி கலந்து கொள்ளும் பொதுக்கூட்டத்தில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

பிரதமர் மோடி தமிழகம் வருவது தேர்தலுக்காக மட்டுமல்லை. தமிழக மக்கள் மீது பிரதமருக்கு அன்பு, பாசம் உள்ளது. ஓபிஎஸ் மீண்டும், அதிமுகவில் சேர இடம் கிடைக்கவில்லை. அதனால் அவருக்கு லாபம் கிடைக்கும் இடத்துக்கு சென்றுள்ளார். இன்னும் ஒரு வாரத்துக்கு பிறகு, பாஜக போட்டியிடும் தொகுதிகள் விவரம் தெரியவரும்.

விஜய் மனைவி விவாகரத்து கோரியது, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை. அதை அரசியல் ஆக்கக் கூடாது. கணவன் மனைவி இடையே உள்ள பிரச்சினைகளை நாம் பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை. காங்கிரஸ் கட்சி தனித்து நிற்பதற்கு தகுதியும் தைரியமும் கிடையாது. அதனால்தான் அவர்கள் திமுக-விடமும் விஜய்யிடமும் பேரம் பேசுகிறார்கள். அவர்களுக்கு யாரிடம் இருந்து லாபம் அதிகமாக வருகிறதோ அங்கு செல்வார்கள். இனி மத்தியில் காங்கிரஸ் ஒருபோதும் ஆட்சியைப் பிடிக்க முடியாது.

தற்போது தான், காங்கிரஸ் விழித்துக் கொண்டு தமிழகத்தில் ஆட்சியில் பங்கு வேண்டும் என கேட்கிறது. ஆட்சியில் பங்கு தரமாட்டோம் என்று திமுக கூறியும் காங்கிரஸுக்கு ரோஷம் வரவில்லை. சூடு சொரணை எதுவுமே, காங்கிரஸ்காரர்களுக்கு கிடையாது. காங்கிரஸ் கட்சிக்கு, திராணி இருந்தால், இந்த தேர்தலில் தனியாக நிற்கட்டும். பாஜகவை தயவுசெய்து காங்கிரஸோடு ஒப்பிட வேண்டாம். பாஜகவுக்கு உள்ள தைரியம், தமிழகத்தில் எந்த கட்சிக்கும் வராது. இவ்வாறு அவர் கூறினார்.

# டெல்லிக்கு படையெடுக்கும் மாஜி காங். தலைவர்கள் – 'ராஜ்ய சபா' சீட் கேட்டு முகாம்

**சென்னை, மார்ச்.02:** தமிழக காங்கிரஸின் முன்னாள் தலைவர்கள் சிலர் ராஜ்ய சபா சீட் கேட்டு டெல்லியில் முகாமிட்டுள்ளது அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

இதுகுறித்து பேசும் சத்தியமூர்த்தி பவன் வட்டாரங்கள், "2016 முதல் 2019 வரை தமிழக காங்கிரஸ் தலைவராக திருநாவுக்கரசர் இருந்தார். 2019 மக்களவைத் தேர்தலில் திருச்சி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் தொகுதி மக்களுக்கு எதுவும் செய்யாததால் கடும் அதிருப்தி நிலவியது.

திருநாவுக்கரசரைத் தொடர்ந்து, முன்னாள் தலைவர் கே.எஸ். அழகிரியும் மாநிலங்களவை சீட் ரேஸில் குதித்துள்ளார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கடலூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காததால் விரக்தியில் இருக்கும் அவர், இந்த முறை எப்படியாவது நாடாளுமன்றத்திற்குள் நுழையத் துடிக்கிறார். இவர்களுடன் முன்னாள் தலைவர்கள் தங்கபாலு, முன்னாள் எம்.பிவிஸ்வநாதன் ஆகியோர் மாநிலங்களவை சீட்டுக்காக மல்லுக்கட்டி வருகிறார்கள்.

முன்னாள் தலைவர்கள் இவ்வளவு முட்டி மோதினாலும், டெல்லி மேலிடத்தின் பார்வை வேறு திசையில் இருக்கிறது. காங்கிரஸின் தேசிய செய்தித் தொடர்பாளரும், ராகுல் காந்தியின் நம்பிக்கைக்குரியவருமான பவன் கேராவை தமிழகம் வழியாக மாநிலங்களவைக்கு அனுப்ப மேலிடம் திட்டமிட்டுள்ளது.

டெல்லி முன்னாள் முதல்வர் ஷீலா தீட்க்ஷித்தின் 'வலது கை'யாகச் செயல்பட்ட அனுபவம் கொண்ட பவன் கேரா, தற்போது காங்கிரஸின் ஊடகப் பிரிவுத் தலைவராக இருந்து பாஜக-வுக்கு எதிராகக் கடுமையான வாதங்களை முன்வைத்து வருகிறார். அவரை நாடாளுமன்றத்திற்குள் கொண்டு வருவதே ராகுல் காந்தியின் விருப்பமாக உள்ளது.

ஆனால், இங்கேதான் சிக்கல் நீடிக்கிறது. "தமிழக ஒதுக்கீட்டில் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவருக்குத்தான் சீட் கொடுப்போம்; வெளிமாநிலத்தவருக்குக் கொடுக்க முடியாது" என்பதில் திமுக பிடிவாதமாக இருப்பதாகக் கூறப்படுகிறது." என்றனர்.

# 12 ஆண்டுகளுக்கு பிறகு பாதாள அறையில் இருந்து வெளியே வந்த அத்திவரதர்- பக்தர்கள் தரிசக்கலாம்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பிரம்மன் கோவில் தெரு பகுதியில் வரதராஜ பெருமாள், வேதநாராயண பெருமாள் கோவில்கள் அமைந்து உள்ளது. இக்கோவில்கள் கடந்த 1739-ம் ஆண்டு கட்டப்பட்டதாகும். சுமார் 180 ஆண்டுகள் பழமையான இக்கோவிலில் வரதராஜ பெருமாள், வேதநாராயண பெருமாள் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றனர்.

இக்கோவிலில் கடந்த 1915-ம் ஆண்டு அத்திவரதர் பாதாள அறையில் இருந்து வெளியே வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதன்பின்னர், சுமார் 98 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த 2013-ம் ஆண்டு அத்திவரதர் வெளியே வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்த அத்திவரதரை தரிசனம் செய்தால் சகல தோஷங்கள், முன்ஜென்ம பாவங்கள் நீங்கும் என்றும், நினைத்த காரியம் கைகூடும் என்றும் ஐதீகம்.

இந்த நிலையில், சுமார் 12 ஆண்டுகளுக்கு பிறகு இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் வருகிற 10-ந்தேதி வரை அத்திவரதர் ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். இதற்காக ஆகம பூஜைகளுடன் நேற்று (சனிக்கிழமை) மாலை அத்திவரதர் பாதாள அறையில் இருந்து வெளியே வந்தார்.

தொடா்ந்து, அத்திவரதர் பிரம்மன் கோவிலுக்கு வீதியுலாவாக புறப்பட்டு மீண்டும் கோவிலை வந்தடைந்தது. பின்னர், அத்திவரதர்- தாயாருக்கு தைலகாப்பு அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

விழா நாட்களில் தைலக்காப்பு, புஷ்பசேவை, ஊஞ்சல் சேவை ஆகியவை நடைபெறுகிறது. தினமும் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரையும் அத்திவரதரை தரிசனம் செய்யலாம்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com